பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 26, சனிக்கிழமை 08.04.2017 | கதிர் 154

யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி ஜோதிட நிலையம் (PVT) Ltd.
P.ஜெய்சங்கர்

கடந்த கால, நிகழ்கால, எதிர்காலம் போன்றவற்றைக் கூறுகிறது.

தொடர்பு : 021 221 7944

நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்.

'கந்தூரி'யில் உணவில் நஞ்சு
4 பேர் உயிரிழப்பு!
ஆஸ்பத்திரியில் 600 பேர்!!

பக்கம் 6 இல்



மன்னிப்புச் சபையின் கிளை
இலங்கையில் அமைப்பதா?
சீறுகிறார் மஹிந்தர்!

பக்கம் 12 இல்



சிவபூமி
10 ஆம் ஆண்டு நிறைவு
சிறப்புக் கட்டுரை

பக்கம் 08 இல்

சிரியா மீது அமெரிக்கா
ஏவுகணைத் தாக்குதல்!
இரசாயன வாயு வீச்சுக்குப் பதிலடி

பக்கம் 15



# போர்க்குற்றங்கள் நடக்கவில்லை என ராஜித யாழில் கூறவேயில்லையாம்!



## நாடாளுமன்றத்தில் அவரே தகவல்

**போர்க்குற்றங்களோ, மனித உரிமை மீறல்களோ இடம்பெறவில்லை என்று யாழ்ப்பாணத்தில் வைத்து தான் தெரிவித்தார் என ஊடகங்களில் வெளியான செய்திகளை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் நிராகரித்தார்.**

1980ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்தே தமிழ் மக்களுக்காகத் தான் குரல் கொடுத்து வருகின்றார் என்றும், தனது நிலைப்பாடு என்னவென்பது தமிழ் மக்களுக்குத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுநடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்எம்.பி.யானசிவசக்தி ஆனந்தன், "ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்ததமிழ்மக்களையும்,எங்களையும்அரசு நடுவீதிக்குக்கொண்டுவந்துவிட்டது.குறிப்பாக அண்மையில் வடக்குக்கு வருகைதந்திருந்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூட ஒருகுண்டைத்தூக்கிப்போட்டார்." – என்றார்.

போரில் போர்க்குற்றங்களோ, மனித உரிமை மீறல்களோ இடம்பெறவில்லை. எனவே, விசாரணை அவசியமில்லை என ஊடகங்களிடம் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார். அவர் முற்போக்குச் சிந்தனையுடைய

பக்கம் 18 »

பாலியல் வன்புணர்வின் பின்னர்

## நெடுந்தீவு சிறுமி கொலை; எதிரிக்கு மரணதண்டனை!

யாழ்ப்பாணம், ஏப்.08

நெடுந்தீவுப் பகுதியில் பன்னிரண்டு வயதுச் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியபின்னர், கல்லால் அடித்துக்கொலைசெய்ததாகக்கூறப்படும் வழக்கில் எதிரியான கந்த

பக்கம் 18 »



## மஹிந்தவைக் காரணம் காட்டி நல்லாட்சி அரசு தமிழரை நடுவீதிக்குக் கொண்டு வந்துவிட்டது

### கிடைத்தது பிணை வீரவன்ஸவுக்கு!



நாடாளுமன்ற உறுப்பினரும் சுதந்திர தேசிய முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸவுக்குடைசியாக நேற்று பிணை அனுமதிகிடைத்தது.

நீதிவான் நீதிமன்றத்தாலும், மேல்நீதிமன்றத்தாலும் பல தடவைகள் பிணை மறுக்கப்பட்டுவந்தநிலையில்நேற்று அவருக்குகொழும்புநீதிவான் நீதி மன்றம் பிணை அனுமதியை வழங்கியது.

ஐம்பதாயிரம்ரூபாரொக்கப்

பக்கம் 18 »

### சிவசக்தி ஆனந்தன் நாடாளுமன்றில் சீற்றம்



கொழும்பு, ஏப்.08

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டாண்டுகள் கடந்துள்ள, போதிலும் தமிழரின் முக்கிய பிரச்சினைகளுக்கு அரசு இன்னும் தீர்வை வழங்கவில்லை என்றும், மஹிந்தவைக் காரணம் காட்டியே தமிழரை இன்று நடுவீதிக்கு அரசு கொண்டு வந்துவிட்டது என்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்வன்னிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினரான

பக்கம் 18 »

## புதிய தேர்தல் முறைமையின் கீழ் இவ்வருடம் உள்ளூராட்சித் தேர்தல்

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை

கொழும்பு, ஏப்.08

புதிய அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நாட்டின் மாற்றத்திற்கான யுகமொன்றின் ஆரம்பமாக அமைந்துள்ளது எனத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, புதிய தேர்தல்முறையைநடைமுறைப்படுத்திஉள்ளூராட்சிசபைத்தேர்

பக்கம் 18 »

அளப்பு அருணாசலம்




## ஊறணியில் பற்றைக் காடுகளே விடுவிப்பு இருக்கும் 4 வீடுகளும் விடுவிக்கப்படவில்லை!

### இறங்குதுறையும் பயன்படுத்தும் நிலையில் இல்லை



(எஸ்.நிதர்ஷன்)

வலிகாமம் வடக்கில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஊறணியில் 28.8 ஏக்கர் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனால், அங்கு வீடுகள் எவையும் இல்லை என மக்களும், அங்குள்ள இறங்குதுறையில் தொழில் செய்யமுடியாதுஎன மீனவர்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

படையினர் காணிகளை விடுத்த போதிலும் அங்கிருந்த மக்களின் வீடுகளை

பக்கம் 18 »

## வெடிவிபத்தில் நீர்கொழும்பில் இருவர் பலி

நீர்கொழும்பு, கிம்புலாப்பிட்டியபிரதேசத்தில்உள்ளபட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று மாலை இடம்பெற்ற வெடி விபத்தில் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளான தொழிற்சாலை உரிமையாளரும் மற்றொருவரும் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர். (உ)

# வடக்கில் அகதிகள் இல்லாத நிலையை இலங்கை அரசு உருவாக்க வேண்டும்

### வட மாகாண முதலமைச்சரிடம் தெரிவித்தார் ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய பணிப்பாளர் டெய்ஜி டெல்



யாழ்ப்பாணம், ஏப்.08

வடமாகாணத்தில் அகதிகள் இல்லாத நிலைமையை அரசு உருவாக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய பணிப்பாளர் டெய்ஜி டெல் வலியுறுத்தியுள்ளார் என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய பணிப்பாளர் யாழ். மாவட்டத்துக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை அவரது செயலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பணிப்பாளர் மற்றும் அவரது குழுவினர் அகதிகள் குறித்து ஆராய்வதற்கு வருகை தந்திருந்தனர்.

இதன்போது தெல்லிப்பழை பிரதேசத்தில் அகதிகள் அதிகமாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு எவ்வாறான நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க முடியுமென ஆராய்ந்தார்.

யாழ். மாவட்டத்தில் தொடர்ந்தும் இராணுவம் இருப்பதால், இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ந்தும் வரக்கூடும்.

இராணுவப் பிரசன்னத்தினாலும், காணிகளை அபகரித்துள்ளமையாலும், மக்களுக்கு காணிகளை வழங்க முடியாத நிலை காணப்படுவதுடன், யாழ்ப்பாணத்தில் இராணுவம் மக்களின் காணிகளை விட்டுச் சென்றால் மாத்திரமே, மக்கள் தமது காணிகளுக்குச் செல்லும் நிலை ஏற்படும் என்று அவர்களுக்குச் சுட்டிக்காட்டினேன்.

இந்தியாவில் இருந்தும் மக்கள் வருகை தந்து கொண்டிருக்கின்றார்கள். எமது நாட்டு மக்கள், எமது நாட்டுக்குத் திரும்பி வருவதை வரவேற்கின்றோம். ஆனால், அவர்களுக்கு உரிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு நாட்டுக்குத் திரும்பி வரும்போது அவர்களின் காணிகள் வேற்று இன மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையை அவதானிப்பதால், அவர்கள் பெரும் பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றார்கள்.

குடியமர்த்தியவர்களை வெளியேற்றாமல் மாற்றுக் காணி தருவதாகக் கூறி வருகின்றார்கள். இவை அனைத்தும் அவர்களுக்கு பல விதமான பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன என்றும் அவர்களுக்குச் சுட்டிக் காட்டினேன்.


இந்த நிலையில், அவர் நாட்டில் அகதிகள் இல்லாத நிலையை இலங்கை அரசு உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் அகதிகள் இல்லாத நிலை ஏற்படுகின்றதா என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் அவதானிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

இந்தியாவில் இருந்து வருகை தரும் இலங்கை அகதிகளுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் அலுவலகமும் முன்வர வேண்டுமென்றும் கோரிக்கை முன்வைத்துள்ளேன்.

அவற்றைப் பரிசீலித்து வருகின்றோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.- என்றார் முதலமைச்சர். (ஐ)

## ஜப்பான் பயணமாக உள்ளார் ரணில்!



கொழும்பு, ஏப்.08

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜப்பான் புறப்பட்டுச் செல்ல உள்ளனர்.

ஜப்பான் செல்லும் பிரதமர், ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபேவை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார் அத்துடன் மேலும் பல உயர்மட்ட அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வருகை தரும் பிரதிநிதிகளை அன்புடன் வரவேற்பதாகவும், இந்த விஜயம் காரணமாகஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுவடையும் என்றும் ஜப்பானிய அரசு அறிவித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமருடன் அமைச்சர்கள் சரத் அமுனுகம, மலிக்சமரவிக்ரம, நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆசு மாரசிங்க, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மேலதிக செயலாளர் சமன் அதாவுதஹெட்டி, விசேட உதவியாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரும் ஜப்பான் செல்கின்றனர். (ஐ)

## நிதி மோசடி விசாரணை பிரிவினரை சந்திப்புக்கு அழைக்கிறார் பிரதமர்

நாட்டில் இடம்பெற்ற மோசடிகள், பெரும் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில், நல்லாட்சி அரசால் உருவாக்கப்பட்ட நிதி மோசடி விசாரணைப் பிரிவின் உயர் அதிகாரிகளைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்திக்கவுள்ளார்.

அண்மைய நாள்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் விசாரணைகள் தொடர்பில் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் உயர் அதிகாரிகளுடன் பிரதமர் பேச்சு நடத்தவுள்ளார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில், நிதி மோசடி விசாரணைப் பிரிவின் உயர் அதிகாரிகளுக்கு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார். அலரி மாளிகையில் தம்மை சந்திக்குமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சீன அரசின் அன்பளிப்பில் 9 மாடிக் கட்டடத் தொகுதி

### கொழும்பு தேசிய மருத்துவமனையில் நேற்று அடிக்கல்

சீன அரசின் அன்பளிப்பின் கீழ் கொழும்பு தேசிய மருத்துவ மனையில் நிர்மாணிக்கப்படும் 9 மாடி கட்டடத் தொகுதிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அடிக்கல் நட்டு வைத்தார்.

சீன அரசின் அரசியல் ஆலோசனை சபையின் தேசிய குழுத் தலைவர் யு.செங்ஷேங் இந்த நிகழ்வில் பங்குபற்றினார்.

இலங்கையின் பிரதான மருத்துவமனையும், ஆசியாவின் விசாலமான மருத்துவமனையுமான கொழும்பு தேசிய மருத்துவமனையின் வெளி நோயாளர் சிகிச்சை பிரிவில் நிலவி வரும் அதிக நெருக்கடிக்குத் தீர்வாக தற்போதைய ஜனாதிபதி, கடந்த மஹிந்தவின் அரசில் சுகாதார அமைச்சராக சேவையாற்றிய காலத்தில் சீன அரசிடம் முன்வைத்திருந்த வேண்டுகோளுக்கு இணங்கவே இந்தக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் தற்போது செயற்படுத்தப்படும் வெளிநோயாளர் பிரிவுக்குப் பதிலாக இந்த முழுமையான நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தக் கட்டடத் தொகுதியின் நிர்மாணப் பணிகளை மூன்றரை வருட காலத்துக்குள் நிறைவு செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## நுண்கலைத்துறை பட்டதாரிகளையும் ஆசிரியர் பணியில் இணையுங்கள்!

### நாடாளுமன்றில் கல்வி அமைச்சரிடம் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை



கொழும்பு, ஏப்.08

தமிழ் மக்களின் அருகிவரும் பாரம்பரிய கலைகளைப் பேணிப் பாதுகாத்து, வளர்த்தெடுக்கும் வகையிலும், அந்தத் துறைசார் பட்டதாரிகளுக்குத் தொழில் வாய்ப்புகள் என்ற வகையிலும், ஆசிரியர் ஆட்சேர்ப்புகளின்போது, நுண்கலைத் துறையையும் இணைத்து விண்ணப்பங்கள் கோருவதற்கும், அதனூடாக இவர்களுக்கு உரிய தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தமிழ்மக்களின் அருகிவருகின்ற பாரம்பரிய நுண்கலைத் துறையை உயிர்ப்பித்தல், அவற்றைப் பேணிப் பாதுகாத்து, வளர்த்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு, கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அன்று முதல் இன்று வரையில் இந்த நிறுவகத்தில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்துள்ள எந்தவொரு பட்டதாரிகளும் தங்களுக்கு உரிய தொழில் வாய்ப்புகளைப் பெறாத நிலையே காணப்படுகிறது. அந்த வகையில் சுமார் 650 பட்டதாரிகள் இத்துறை சார்ந்த வேலைவாய்ப்புகளை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில், 5 வருட கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ள இந்தப் பட்டதாரிகள் விரக்தி நிலை அடைந்து தற்போது சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில், இந்தத் துறையில் புதிய மாணவர்களுக்கு நாட்டம் குறைந்துள்ளது.

எனவே, இந்தப் பட்டதாரிகளையும் ஆசிரியர்களுக்கான நியமனங்களின்போது இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.-என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## வடக்கில் 6 சமுர்த்தி வங்கிகள் தரப்படுத்தலில் 'ஏ' தரம் பெற்றன

'சமுர்த்தி வங்கிகளுக்கு புகழாரம்' எனும் தொனிப்பொருளில் கொழும்பில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற சமுர்த்தி வங்கிகளுக்கான தரப்படுத்தல் நிகழ்வில் இலங்கையில் உள்ள ஆயிரத்து 74 சமுர்த்தி வங்கிகளில் 34 வங்கிகள் 'ஏ' தர வங்கிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் வடக்கில் ஆறு வங்கிகள் 'ஏ' தர வங்கிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் ஐந்து வங்கிகள் யாழ். மாவட்டத்திலும் ஒன்று கிளிநொச்சி மாவட்டத்திலும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் சைட்டத்திற்கு எதிராகப் பணிப்புறக்கணிப்பு

வவுனியா, ஏப்.08

சைட்டம் தனியார் மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு எதிராக, வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சைட்டத்திற்கு எதிராக கடந்த சில மாதங்களாக நாடு முழுவதிலும் அவ்வப்போது போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், நேற்று நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் இடம்பெற்றன.

மேற்படிப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே வவுனியா வைத்தியசாலை வைத்தியர்களும் நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

பல இடங்களில் இருந்தும் நேற்று வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சை பெறச் சென்றவர்கள் நேற்யை பணிப் பகிஷ்கரிப்பால் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கினர். வெளிநோயாளர் பிரிவுக்குச் சென்ற நோயாளர்கள் ஏமாற்றமடைந்தவர்களாக நோய் நிலையுடன் திரும்பிச் சென்றனர். ஆனால், அவசர சிகிச்சைப் பிரிவுகள் மட்டும் இயங்கின. (ஐ-100)

## குருநாகல் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட சு.க. அமைப்பாளர்களுக்கு நியமனக்கடிதம்

குருநாகல் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நான்கு புதிய அமைப்பாளர்களுக்கும் தொகுதி அமைப்பாளர் ஏழு பேருக்கும் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமனக் கடிதங்களை வழங்கினார். நேற்று வெள்ளிக்கிழமை இந்த வைபவம் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குருநாகல் மாவட்டத் தலைவராக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா நியமிக்கப்பட்டுள்ளார்.

## வடமாகாண அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல்

ஆறுதல் நிறுவனத்தால் நடத்தப்படும் கருத்தூன்றல் களத்தின் பதின்மூன்றாவது கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காலை பத்து மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் கந்தையா சர்வேஸ்வரன், "வடமாகாண அபிவிருத்திக்கான வாய்ப்புகளும் சவால்களும்" என்ற தொனிப் பொருளில் கருத்துரை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெறும். (அ)

## பாபுல், பீடா, மாவா உள்ளிட்ட போதைப் பொருள்களுக்குத் தடை

### தடையை மீறினால் ஒருவருடச் சிறை

இலங்கையில் சில போதைப் பொருள்களுக்குத் தடை விதிக்க நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அந்த வகையில் பாபுல், பீடா, மாவா, ஹான்ஸ், புகையிலைத் தூள், இறக்குமதி செய்யப்படும் பாக்கு, இலத்திரனியல் சிகரெட் ஆகியன தடை செய்யப்பட்டுள்ளன.

இவற்றை விற்பனை செய்தால் அபராதம் அல்லது ஒரு வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையின் ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பதற்கான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிகரெட் பெட்டிகளில் 80 வீத எச்சரிக்கைப் புகைப்படம் கொண்டுவரப்பட்டுள்ளது. மீதமுள்ள 20 வீதப் பகுதிகளில் பெயரை மட்டுமே குறிக்கும் வகையில் ஏற்பாடு இடம்பெறும். அத்துடன், தனி சிகரெட் விற்பனைக்கும் தடைவிதிக்கப்படும். அதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள் உள்ள பகுதியின் 500 மீற்றர் வரையான தூரத்தில் சிகரெட் விற்பனை செய்வதற்கும், மதுபானம் விற் பதற்கும் தடை விதிக்கப்படும் – என்றார். (ம)

## புளியம்பொக்கணையில் நாளை பொங்கல் உற்சவம்

நாவற்குழி, ஏப். 07

வரலாற்றுச் சிறப்புமிக்க புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெறவுள்ளது.

இப்பொங்கல் உற்சவத்தையொட்டி பொங்கலுக்கு வேண்டிய பண்டங்கள் தென்மராட்சி, மீசாலை – புத்தூர்ச் சந்தியிலுள்ள புளியம்பொக்கணை ஆலயத்திற்கான பண்ட மரவடியிலிருந்து இன்று நண்பகல் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பாரம்பரிய பழைய கிராமிய வழிபாட்டு முறையுடன் கொண்டு செல்லப் பட்வுள்ளன. இப்பொருள்கள் மாட்டு வண்டில்களில் எடுத்துச்செல்லப் படும்.

மாட்டுவண்டியில் நாகதம்பிரானை வைத்து, அதனுடன் கூடிய பிரம்புகள் வைக்கப்பட்டு, தவில், நாதஸ்வர மற்றும் பறை வாத்தியங்களுடன் கூடார வண்டில்கள், உழவு இயந்திரங்கள் நீண்ட வரிசையாக புளியம் பொக்கணை ஆலயத்தை நோக்கிப் பயணிக்கும்.

இந்தப் பொங்கல் பண்ட ஊர்வலத்தின்போது வீதிகளில் நிறைகுடங்கள் வைத்து நாகதம்பிரானை வழிபடுவார்கள். பொங்கல் நாளான ஞாயிறு மாலை இந்த மாட்டு வண்டிலுடன் கூடிய ஊர்திகள் ஆலயத்தை அடைந்து அங்கு பொங்கல் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்தப் பொங்கல் உற்சவத்தையொட்டி இலங்கைப் போக்குவரத்துச் சபைகளின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு பஸ்கள் ஆலயத்துக்கான அடியார் போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடும்.

ஆலயச் சூழலில் சுகாதாரம் மற்றும் குடிதண்ணீர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் சீர் செய்யப்படவுள்ளதாவும் தெரிவிக்கப் பட்டது. பெருமளவு பக்தர்கள் ஆலய வளாகத்தில் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-22)

## 10 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை அன்பளிப்பாக வழங்கியது பாகிஸ்தான்




இலங்கையில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கு வதற்கு பாகிஸ்தான் அரசு 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அரிசி வழங்கும் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன் அடிப்படையில் முதல் கட்டமாக பாகிஸ்தான் 7 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இலங்கைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது. இந்தநிகழ்வில் பாகிஸ்தான் பிரதித் தூதுவர் கலந்து கொண்டார். (ம)

# மைத்திரி – மஹிந்த நேரில் சந்திப்பு; கைகூப்பி வணக்கம் தெரிவித்தனர்





கொழும்பு, ஏப்.08

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்து வணக்கம் தெரிவித்துக்கொண்டனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

காலம் சென்ற வண. அக்கமஹா பண்டித தவுல்தென ஞானீசர மகா நாயக்க தேரரின் இறுதிச் சடங்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த இறுதிநிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆகியோர் நேருக்கு நேர் சந்தித்தனர்.

மேற்படி நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் ரணில் விக்ரமசிங்க, சபாநாயகர் கருஜயசூரிய மற்றும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோருடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடிக் கொண்டிருந்தார். அச்சமயம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்குள் தொடர்புபடாமல் இருந்தார்.

எனினும், சிறிது நேரத்தின் பின்னர் அனைவரும் எழுந்து நின்றபோது இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்து வணக்கம் பரிமாறிக்கொண்டனர். (ம)

### தம்மைச் சிறையில் அடைத்தமைக்காக

## ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நன்றி கூறினார் விமல் வீரவன்ஸ

"அதிக உத்வேகத்துடன் அரசியலில் ஈடுபட வழியை ஏற்படுத்தித் தந்த ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்" என விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.

நீண்ட நாள்களுக்குப் பின்னர் பிணை வழங்கப்பட்ட விமல் வீரவன்ஸ நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் கூறினார்.

'வாகனத்தின் இன்ஜின் சூடாகினால்தான் அது வேகமாகச் செல்வதற்குத் தயாராகும். அதேபோன்று எனது அரசியல் நடவடிக்கையை முன்னெடுக்க என்னை சிறையில் இட்டு இந்த அரசாங்கம் தயாராக்கிவிட்டுள்ளது. ஏற்கனவே இருந்ததைப்பைவிடவும் புதுத் தென்பு கிட்டியுள்ளது. இதற்காக அரசுக்கு நன்றி கூறுகின்றேன்' – என்றார் விமல் வீரவன்ஸ.

## விசாரணை சமயம் கைப்பேசி ஒலித்ததால் ஆணைக்குழு சீற்றம்!

### அர்ஜுன மகேந்திரனுக்கு எச்சரிக்கை

திறைசேரி பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை செய்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் பிரசன்னமாகியிருந்த முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் கைப்பேசி திடீரென ஒலித்தமைக்கு அவரை ஆணைக்குழுவின் தலைவரான உயர்நீதிமன்ற நீதியரசர் கே.டி.சித்திரசிறி கடுமையாக எச்சரித்தார்.

நீதிமன்றமொன்றில் பிரசன்னமாகியிருக்கும் எவரும் நீதிமன்றப் பணிகள் முடியும் வரை தமது கைப்பேசிகளைச் செயலிழக்கச் செய்யவேண்டியது முக்கியம் எனவும், அவ்வாறு செய்யாமல் அவற்றை ஒலிக்கவிடுவது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் எனவும் நீதியரசர் கடுமையான தொனியில் எச்சரிக்கை விடுத்தார்.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான கே. டி. சித்திரசிறி (தலைவர்), பிரசன்ன ஜயவர்தன மற்றும் முன்னாள் பிரதிக் கணக்காய்வாளர் வேலுப்பிள்ளை கந்தசாமி ஆகியோர் அடங்கிய ஆயத்தின் முன் இந்த விசாரணைகள் நடந்துவருகின்றன.

அர்ஜுன் மகேந்திரனின் சாட்சியம் ஏற்கனவே முடிவடைந்துவிட்டபோதிலும் அவர் ஆணைக் குழுவின் தொடர் அமர்வுகளைக் கண்காணிக்க வேண்டுமென விடுத்த வேண்டுகோளுக்கு ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தது. அவ்வாறான கண்காணிப்புக்கு நேற்று முன்தினம் பிரசன்னமாகியிருந்தபோதே அவரது தொலைபேசி எதிர்பாராதவிதமாக ஒலித்திருக்கிறது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மாகாண சபையின் செயற்பாடு

**"வடக்கு மாகாண சபை சில்லறைக் கடை அல்ல. எனவே, மாகாண சபையை சில்லறைத்தனமாக விமர்சிப்பதை நாடாளு மன்ற உறுப்பினர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும்."**

- இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கடும் தொனியில் கூறியிருக்கின்றார்.

'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சுதான்' என்பார்கள். அவைத் தலைவர் சிவஞானத்தின் நிலையும் கூட அதுதான். தான் அவைத் தலைவராக இருக்கும் வடமாகாண சபையின் செயற்பாடுகளை நியாயப்படுத்த வேண்டியது அவர் அமர்ந்திருக்கும் கதிரையின் - பதவியின் - கட்டாயம்.

ஆனால், இதைப் போல பல அமைப்புக்களை அவர் பார்த்தவர். வடக்குமாகாணசபையின்வினைத்திறன்குறித்துஉள்ளேயிருந்தே சுயமாக மதிப்பிடத் தெரியாதவர் - அல்லது மதிப்பிட முடியாதவர் - அல்லர் அவர். அவருக்கு எல்லாம் தெரியும். பல களம் கண்ட நிர்வாகி அவர். சபை எங்ஙனம் இயங்குகிறது. யார் இயக்குகின்றார்கள் அல்லது ஏன் இயங்கவில்லை. எவை, எவை அல்லது எது. எது வெட்டிப் பேச்சுடன் வீணாகப் போகின்றன என்பவை எல்லாம் அவருக்கு நன்கு தெரியும். அந்த விடயங்கள் அவருக்கு அத்துப்படி.

சபை அமர்வை எப்படி நடத்த முடிகின்றது, எப்படி அவை ஒப்பேறுகின்றன என்பவற்றையெல்லாம் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீதம் தமது கண்களுக்கு முன்னால் கண்டவர் அவர் தானே...!

முப்பத்தியெட்டு உறுப்பினர்களைக் கொண்ட வடக்கு மாகாண சபையில், எதிர்க்கட்சியினர் ஆக எண்மரே. முப்பது பேர் என்ற பெருவெற்றியுடன் ஆட்சிக்கு வந்த ஒரு தரப்பு எவ்வளவு வேகமாகவும், எவ்வளவு சுறுசுறுப்பாகவும், எவ்வளவு சிறப்பாகவும் செயற்பட்டிருக்க முடியும் என்பதும், எவ்வளவு தூரத்துக்கு அது செயற்பட்டது என்பதும் அவைத் தலைவருக்கு தெரியாதவையல்ல.

ஆளும் கட்சியே பல கன்னைகளாகப் பிரிந்துகொண்டு நடத்தும் அந்த யுத்தத்தைப் பார்த்து 'பரவசப்படாத' கண்களே இல்லை எனலாம். அத்தகைய நிலையில் முழுக் கூட்டங்களையுமே நடத்தி, இந்த ஆளும் கட்சிக் குழுக்களின் கன்னை பிரிந்த மோதல்களைச் சமாளிக்க முடியாமல் எப்போதும் திண்டாடிக் களைப்பவர் அவர்தானே...! அவருக்கு இவை எல்லாம் தெரியாதா?

"335 தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம். அவற்றைப் பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களுக்கு அனுப்பியிருக்கிறோம். அதற்கமைய பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன." - என்றும் அவர் கூறியிருக்கின்றார். அவை கூறவேண்டியவைதான்.

ஆனால், நிறைவேற்றப்பட்ட 335 தீர்மானங்களில் எத்தனை மாகாண சபை நியாயாதிக்கத்துக்குள் - வடக்கு மாகாண சபையின் கடப்பாட்டுக்குள் - வந்தவை? அவற்றில் எத்தனை சபையின் நிர்வாகம் மற்றும் அதிகார விடயங்களுக்கு அப்பாலானவை? நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் எத்தனைக்கு செயலுருக் கொடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன? எத்தனை செயலுருக் கொடுக்கப்பட்டன? அவை பற்றிய விடயங்களையும் அவைத் தலைவர் வெளிப்படுத்துவாராயின், வடக்கு மாகாண சபையின் செயற்றிறனுக்கான மதிப்பீடு மிகவும் இலகுவானதாகவும் செம்மையானதாகவும் இருக்கும்.

அடுத்து, நியதிச் சட்ட விவகாரம். அவைத் தலைவர் கூறுகின்றமை போல, நியதிச் சட்ட விவகாரம் இலகுவான செயல்கள் அல்ல. இருந்தும் அவற்றைச் செய்கின்றோம் என்று அவர் கூறுகின்றமையை ஒப்புக்கு ஏற்போம்.

ஆனால், இதில் அளவீடு வெறுமனே வாய்ப்பேச்சாக இருக்க முடியாது.

வடக்கு மாகாண சபை இந்தத் தடவைதான் அமைக்கப்பட்டுள்ளது. மற்றைய மாகாண சபைகள் முதல் தடவை அமைக்கப்பட்டபோது அவை முதல் பதவிக் காலத்தில் தமக்குத் தமக்கென நிறைவேற்றிய நியதிச் சட்டங்கள் எத்தனை? முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் ஆண்டு முடிவுகளில் அவை நிறைவேற்றிய நியதிச் சட்டங்கள் எத்தனை? அவற்றின் பரப்பெல்லைகள் யாவை? என்பவை குறித்து ஒரு புள்ளி விவர ஒப்பீடு முன்வைக்கப்பட்டால் மட்டுமே இவ்விடயத்தில் அவைத் தலைவரின் கருத்தை நியாயப்படுத்தவோ, ஏற்கவோ, நிராகரிக்கவோ முடியும்.

சபையின் உறுப்பினர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்ட பிரமாண நிதியிலிருந்து ஒப்பேற்றப்பட்ட செயற்றிட்டங்களைக் காட்டி, சபை சுறுசுறுப்பாக இயங்குவதாகக் காட்டுவதோ, அந்தத் திட்டச் செயற்படுத்தல்தான் சபையின் பணி என்று கருதுவதோ பொருத்தமற்றவை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தப் பத்தியில் நேற்று நாம் சுட்டிக்காட்டியபடி, கல்விப் புலத்திலிருந்து, சர்வதேச விமானசேவை வளத்தை எமது பிரதேசத்துக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றமை வரை பல விடயங்களை நாம் செய்தாக வேண்டியிருக்கின்றது.

எமது மக்களின் பிரச்சினைகளை நாமே கையாளத்தக்கதாக மேலும் அதிகாரங்கள் எமக்குப் பகிரப்பட வேண்டும் என்று போராடிக் கொண்டிருப்பவர்கள் நாங்கள்.

இப்போது வைத்திருக்கின்ற அதிகாரங்களை நாம் செம்மையாகப் பிரயோகித்து உரிய பலனை நமது சமூகத்துக்கு ஈட்டிக் கொடுக்கும் நமது தகுதியை நாம் நிரூபிக்க வேண்டும். இதற்கு மேலும் அதிகாரம் கோரத் தகுதியுடையவர்கள் என நாம் நம்மைக் காட்ட முடியும். அந்த அளவீட்டுக்கான தளமாகவும் வடக்கு மாகாண சபை இருப்பதை நாம் கிஞ்சித்தும் மறந்துவிடக்கூடாது.

# பிரதான இரு கட்சிகளும் இணைந்திருந்தால் பாதிப்பு

## நீண்டகாலம் ஆட்சி செய்தால் மக்கள் மாற்றத்தை விரும்புவர் என்கிறார் எஸ்.பி.



நாட்டிலுள்ள இரு பிரதான கட்சிகளும் நீண்ட காலம் ஒன்றாக இணைந்திருந்தால், நாட்டின் ஜனநாயகத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களிடம் நேற்றுமுன்தினம் கருத்து வெளியிடும்போதே அமைச்சர் இதனைக்கூறியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இரண்டு பிரதான கட்சிகள் நீண்டகாலம் ஆட்சி செய்தால், நாட்டு மக்கள் மாற்றத்தைத் தேட ஆரம்பிப்பார்கள்.

அந்த மாற்றம் சில நேரம் ஆயுதம் தாங்கிய அமைப்பாக இருக்கலாம்அல்லதுஅடிப்படைவாதம், இனவாதம், ஜாதிவாதக் குழுக்கள் தலைதூக்குவதற்கு காரணமாக அமையலாம்.

நடை பேரணியாக வந்து ஜனாதிபதி மாளிகையை முற்று கையிடப் போவதாகக் கூட்டு எதிர்க்கட்சி கூறுவது கேலிக்குரியது.

அப்படியான நடை பேரணிக்கு 12 ஆயிரம் பேரை திரட்டுவது கூட மிகவும் கடினமானது. எது எப்படி இருந்த போதிலும் கூட்டு எதிர்க்கட்சியுடன் ஒரு நட்புறவான மோதலே காணப்படுகிறது.

அவர்களில் 90 வீதமானோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இருக்கின்றனர். கிராமத்து வாக்குகள் மஹிந்த ராஜபக்ஷவுக்கே உள்ளன என்று கூட்டு எதிர்க்கட்சியினர் நம்புகின்றனர்.

அது கடந்த தேர்தலில் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் தற்போது அந்த வாக்குகள் சிதறி வருகின்றன.- என்றார்.

# துறைமுகம் விற்கப்படுவது குறித்த வதந்திகள்: சர்வதேசத்தை ஈர்க்க கடந்த கால அரசின் சதி

## நளின் பண்டார கூறுகிறார்

கொழும்பு, ஏப்.08

அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்களுக்குள் துறைமுகத்தை விற்பனை செய்ய நினைக்கின்றது என்று பரப்பப்படும் வதந்திகள் சர்வதேசத்தைத் தன்வசம் ஈர்ப்பதற்காகக் கடந்த அரசு திட்டமிட்டுள்ளசதி என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த இரண்டு வருட காலமாக தற்போதைய அரசுக்கும் கடந்த 5 வருட காலமாக கடந்த அரசுக்கும் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் முதலீடுகளை செய்ய முடியாது போனதால், இப்படியான தீர்மானத்தை எடுக்க நேர்ந்தது.

அரசு, துறைமுக ஒப்பந்தத்தில் முதலீடு செய்ய வில்லை. முதலீடு செய்ய வும் முடியாது. துறைமுகங்களைக் கோரி எந்தச்சீன நிறுவனம் இலங்கைக்கு வருகின்றது? என்று நான் கேள்வி எழுப்புகிறேன்.

அப்படியாரும்இதுவரையில் இலங்கைக்கு வந்ததில்லை. இதுதொடர்பிலானஆவணங்கள் துறைமுகப் பாதுகாப்புச்சேவையிடம் காணப்படுகின்றன.

இலங்கையின் துறைமுகங்களைசீனாவால் வாங்க முடியும். ஆனால் அதற்கு முன் மஹிந்த வாங்கியுள்ள கடனை அரசே செலுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது.

10 ஆண்டுகள் ஆட்சி யில் 20 பங்குகளுக்கும் மேலதிகமான பணத்தை ராஜபக்ஷாக்கள் மோசடி செய்துள்ளார்கள். முடிந்தால் அவற்றையெல்லாம் ஒப்படைத்து விட்டு அதன்பின் துறைமுகம் பற்றிப் பேசட்டும். -என்றார். (எ)

# கைதிகளின் மரணதண்டனையை ஆயுள் தண்டனையாக்க பரிந்துரை!

கொழும்பு, ஏப்.08

மரண தண்டனைக் கைதிகளின் தண்டனையை, ஆயுள் தண்டனைவரைகுறைக்குமாறு, நாடாளுமன்றத்துக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் நிலவும் இடநெருக்கடி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்புத் தொடர்பிலான நீதிமன்ற நடவடிக்கை மற்றும் சட்டக்காரணங்களைத் தேடியறியும் சிறப்புப் படையணியால்தாக்கல்செய்யப்பட்டுள்ள முதலாவது அறிக்கையிலேயே மேற்கண்டவாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சிறைச்சாலைகளில் நெருக்கடியைக் குறைப்பதற்காக, கைதிகளைசிறைகளில் தடுத்து வைப்பதற்குப் பதிலாகவும், தண்டப்பணம் செலுத்த முடியாதவர்களைச் சிறைகளில் தடுத்து வைப்பதற்குப் பதிலாகவும் மாற்று ஏற்பாடுகள் பல பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

குற்றவாளிகள் அல்லாத நபர்கள் 9 ஆயிரத்து 552 பேர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது, கைதிகளின் முழு எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 52 சதவீதம். தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரம், ஆயுள் தண்டனைக் கைதிகளின் தண்டனையும் குறைக்க முடியும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதுவரையிலும், மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை ஆயிரத்து 82 ஆகும். அவர்களில், 726 பேர் மேன்முறையீடு செய்துள்ளனர். ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் முழு எண்ணிக்கை 555 ஆகும். அதில், 463 பேர் மேன்முறையீடு செய்துள்ளனர்.- என்றுள்ளது. (எ)




**"வேகம் விவேகம் அல்ல"**

**பாதசாரிகள் வீதியின் வலது பக்கமாக நடந்து செல்லுதல் வேண்டும். எப்போதும் இதனை நடைமுறைப்படுத்துவோம். சிறுவர்களுக்கும் இதனைச் சொல்லிக் கொடுப்போம்.**

தகவல் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகர சபை, யாழ்ப்பாணம்.

## நாளை

09.04.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : உத்தரம் பி.இ. 2.9 வரை
திதி : திரயோதசி மு.ப. 10.19 வரை

சுபநேரம் : 9.07 - 10.37 வரை
இராகுகாலம் : 4.37 - 6.07 வரை

# மைத்திரிதான் இந்த நாட்டு ஜனாதிபதி; மே தினக் கூட்டத்தில் உணர்த்துவோம்!

## இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா சுட்டிக்காட்டு

கண்டியில் நடைபெறவுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தின் போது, மைத்திரிபால சிறிசேனவுக்கு, அவர் இந்த நாட்டின் ஜனாதிபதி என்பதை உணர்த்திச் சொல்லி நினைவூட்டவுள்ளோம்.

-இவ்வாறு இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்துள்ளவை வருமாறு:-

ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அவர் பிரதமர் என்பது தெரியா நிலையில் உள்ளார் . ஆனால், மஹிந்த ராஜபக்ஷ தான் ஜனா திபதி என்று நினைத்துக் கொண்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தற் போதைய ஜனாதி பதியாகவே தன்னை நினைத் துக் கொண் டுள்ளார். அதே போன்று, மைத்திரிபால சிறி சேன தானே



இந்த நாட்டின் ஜனாதிபதி என்பதை மறந்துள்ளார்.

அவருக்கு இந்த மே தினக் கூட்ட ஊர்வலத்தின் போது, அவர்தான் இந்த நாட்டின் ஜனா திபதி என்பதை நினைவுபடுத்த வுள்ளோம். யார் எதைச் சொன் னாலும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் இந்த நாட் டின் ஜனாதிபதி என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

கண்டியில் நடைபெறவுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தின் போது, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி யினதும், மஹிந்த சார்பு குழுவி னரதும் இருவேறு பாதைகள் என்னவென்பது தெளிவாகும்.

மைத்திரிபால சிறிசேன இடது பக்கத்துக்குச் சமிக்ஞை யைக் காட்டி, வலது பக்கத் துக்கு வாகனத்தைச் செலுத் தியவர். இவ்வாறு வலது பக்கத் துக்குச் சென்ற இவரது பய ணத்தைத் திருப்பி எடுப்பது அவ் வளவு கஷ்டமான ஒன்றல்ல.

இந்த மே தினத்தில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இருவழிப் பயணம் தொடர்பில் தெளிவான செய்தியை நாட்டு மக்களுக்கு வழங்கவுள்ளோம். -என்றார். (ஐ)

# 15 உயர் படை அதிகாரிகள் விவரம் போர்க் குற்றவாளிகளது பட்டியலில்!

## மனித உரிமைப் பேரவை வெளியிட்டது என்கிறது சிங்கள ஊடகம்

கொழும்பு, ஏப்.08

மனித உரிமை மீறல் தொடர்பில் அரசு விசாரணை நடத்துவதற்கு முன்னதாகவே, 15 உயர்படையதிகாரிகள் போர்க் குற்றவாளிகள் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை பெயரிட்டுள்ளது.

இவ்வாறு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

முன்னாள் தமிழீழ விடுதலைப் புலித் தலைவர்கள் சிலர் போலிச் சாட்சியங்களைச் சமர்ப்பித்து இவ்வாறு படையதிகாரிகளுக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளனர்.


இவ்வாறு குற்றம் சுமத்திய புலித் தலை வர்களுக்கு சுவிஸ் புகலிடம் வழங்கியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்களின் உண்மைத் தன்மை குறித்து மனித உரிமைப் பேரவை விசாரணை நடத்தாது, 15 படையதிகாரிகளை போர்க் குற்றவாளிகளாகப் பெயரிட்டுள்ளது. பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரும் போர்க் குற்றவாளியாக அடையாளப்படுத் தப்பட் டுள்ளார் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது. படையதிகாரிகள் போர்க் குற்ற வாளிகள் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அடையாளப்படுத்தியுள்ளது என்ற தகவலுக்கான உத்தியோகபூர்வ சான் றுகள் எதனையும் அந்த ஊடகம் சுட்டிக்காட்ட வில்லை. (ஐ)

# மகப்பேற்றுக் கால விடுமுறை நாள்களில் அரச, தனியார் பெண்களுக்கு சம உரிமை

## நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்கிறார் தொழிற்சங்க விவகார அமைச்சர்

கொழும்பு, ஏப்.08

அரசதுறையில் நடைமுறையில் இருக்கும் மகப்பேறு கால விடு முறையை தனி யார் துறையிலும் அமுல்படுத்தும் வகையில் தேவை யான நடவடிக்கை கள் எடுக் கப்பட்டு வருகின்றன என்று தொழில் மற்றும் தொழிற்சங்க விவ கார அமைச்சர் ஜோன் செனவி ரட்ண தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இதற்கான சட்டமூல வரைவு திருத்தங்கள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன. அரச துறையில் பணி புரியும் பெண்களுக்கு மகப் பேறுக் காக 84 நாள்கள் சம்பளத் துடன் விடுமுறை வழங்கப்படுகிறது. எனினும், தனியார் துறையில் இதற் குப் குறைவான விடுமுறை காலமே வழங்கப்படுகிறது.

இரண்டு துறைகளிலும் தொழில் புரியும் பெண்களுக்கு சம உரி மையை வழங்கத் தேவையான நட வடிக்கைகளை எடுத்து வருகி றோம். -என்றார். (ஐ)

# பிறந்த குழந்தையைப் புதைத்த பெண் பலாங்கொடையில் கைது!

கொழும்பு, ஏப்.08

பலாங்கொடை பிரதேசத் தில் பெண் ஒருவர் பிறந்த குழந்தையை மண்ணில் புதைத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு தாய் புதைத்த குழந்தையை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர் பில் 22 வயதுடைய யுவதி ஒருவர் பலாங்கொடை, அளுத்நுவர, கொஸ்உலன பிரதேசத்தில் கைது செய் யப்பட்டுள்ளார். இந்தப் பெண் நேற்றுமுன்தினம் பலாங் கொடை நீதிவான் நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்.

புதைக்கப்பட்ட குழந்தை யின் சடலமும் நேற்று முன் தினம் பலாங்கொடை நீதி வான் முன் காண்பிக்கப்பட் டது. சில வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்து கணவர் கைவிட்டுச் சென்ற பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர். (ஐ)


# மணமக்கள் தேவை

★83 இல் பிறந்த 8 இல் செவ்வாய், 25 பாவமுடைய, பெல்ஜியம் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.

★85 இல் பிறந்த, செவ்வாய் பாவம் இல்லாத, 13 1/2 பாவமுடைய, சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த, அழகான, மண மகள் தேவை (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)

★85 இல் பிறந்த 12 இல் சூரியனும் செவ்வாயும் 14 பாவமுடைய, பிரான்ஸ் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

★84 இல் பிறந்த, செவ்வாய் பாவம் இல்லாத, 25 பாவமுடைய, லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.

★89 இல் பிறந்த, 8 இல் சூரியனும் செவ்வாயும், 103 பாவமுடைய, CIMA, B.B.M. முடித்து தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மண மகனுக்கு படித்த மணமகள் தேவை.

★87 இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல் 19 3/4 பாவமுடைய B.Sc. இஞ்ஜினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

★88 இல் பிறந்த, 10 செவ்வாய் 7 பாவமுடைய, B.Sc. இஞ்ஜி னியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

★86 இல் பிறந்த, 8 செவ்வாய், 92 3/4 பாவமுடைய M.Sc., Quantity Surveyor மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

★85 இல் பிறந்த, 8 இல் சூரியன், செவ்வாய் 43 1/2 பாவமுடைய M.Sc. இஞ்ஜினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

★83 இல் பிறந்த, 7 இல் சூரியனும் செவ்வாயும் 59 1/2 பாவ முடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை

இல62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி, முடமாவடி.

T.P. 077 6070862



# சிவபூமி முதியோர் இல்லம்

தொல்புரம், சுழிபுரம்

## 10 ஆவது ஆண்டு பூர்த்தி விழா

SIVA POOMI SCHOOL

காலம்: இன்று 08.04.2017, சனிக்கிழமை
பி.ப. 3.30 மணி

இடம்: பாலச்சந்திரன் மண்டபம்,
சிவபூமி முதியோர் இல்லம்.

தலைவர்: செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு.திருமுருகன்
*(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)*

பிரதம விருந்தினர்: திரு.திருமதி கந்தையா நீலகண்டன் தம்பதிகள்
*(தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)*

சிறப்பு விருந்தினர்கள்: திரு.நா.வேதநாயகன் தம்பதிகள்
*(அரச அதிபர், யாழ். மாவட்டம்)*
திரு.வை.எழுலிங்கம் தம்பதிகள்
*(இளைப்பாறிய கணக்காளர்)*

அன்புடையீர்!
வணக்கம்

இறையருளாலும், பெரியவர்களின் ஆசியாலும், அன்பர்களின் ஆதரவாலும் எமது இல்லம் பத்தாவது ஆண்டில் கால் பதித்து சிறப்பாக இயங்கி வருகிறது. எமது இல்லத்தில் தற்போது 79 முதியோர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். எமது இல்லம் ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை சிறப்பாகக் கொண்டாடி மகிழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாக சபை
சிவபூமி அறக்கட்டளை.

நிகழ்ச்சி நிரல்

+ 3.30 மணி சிவபூமி ஞான வைரவர் ஆலய விசேட பூசை வழிபாடு
+ 3.40 மணி மங்கல விளக்கேற்றல்
+ 3.45 மணி திருமுறை வழிபாடு
+ 3.50 மணி வரவேற்புரை: திரு.க.சிவாஜி அவர்கள்
*(உப தலைவர், சிவபூமி அறக்கட்டளை)*
+ 4.00 மணி ஆசியுரைகள்
சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள்
*(பிரதம குரு, துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)*
சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள்
*(பிரதம குரு, வழுக்கம்பரை முத்துமாரி அம்மன் கோவில்)*
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் *(முதல்வர், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்)*
சுவாமி சர்வ ரூபானந்த மகராஜ்
*(முதல்வர், கொழும்பு இராமகிருஷ்ண மிசன்)*
+ வாழ்த்துரைகள்: திரு.அ.சோதிநாதன் அவர்கள்
*(பிரதேச செயலர், சங்கானை)*
Dr.செ.கண்ணதாசன் அவர்கள்
(விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
Dr.T. சத்தியமூர்த்தி அவர்கள்
*(பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை)*
+ ஆவண ஒளிநாடா வெளியீடு "தரிசனம்"
தயாரிப்பு:சிவன் ரீவி
வெளியீட்டுரை: திரு.கு.பாலசண்முகன் அவர்கள்
*(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)*
+ சிறப்பு மலர் வெளியீடு: "சிவபூமி நிழல்"
வெளியீட்டுரை : திரு.ந.விஜயசுந்தரம் அவர்கள்
*(ஆசிரியர், வலம்புரி பத்திரிகை)*
+ கலை நிகழ்ச்சிகள்:
கோண்டாவில் சிவபூமி மன விருத்திப் பாடசாலை மாணவர்கள்.
+ காவடி ஆட்டம்: அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவர்கள்.
+ நாடகம்: கடவுளும் குட்டியும் (சிறுவர் நாடகம்)
வழங்குபவர்: மாணவர்கள் நாடகமும் அரங்கியலும், யாழ். பல்கலைக்கழகம்.
+ வில்லிசை: துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள்
+ நடனம்: பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவர்கள்.
+ நன்றியுரை: திரு.பு.ஸ்ரீ விக்னேஸ்வரன் [இணைச் செயலாளர்]
இராப்போசன விருந்து

(R/012)

# 'கந்தூரி' நிகழ்வில் உணவு ஒவ்வாமை! 4 பேர் சாவு; 600 பேர் ஆஸ்பத்திரிகளில்!!







## இறக்காமம் பள்ளிவாசலில் பெரும் அனர்த்தம்

அம்பாறை, ஏப்.08

கிழக்கு மாகாணம், இறக்காமம், வாங்காமத்திலுள்ள பள்ளி வாசல் ஒன்றில் இடம் பெற்ற கந்தூரி நிகழ்வின்போது அங்கு வந்திருந்த மக்களுக்குப் பரிமாறப்பட்ட உணவு ஒவ்வாமை காரணமாக இதுவரையில் நால்வர் உயிரிழந்தனர். சுமார் 600 பேர் வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கந்தூரி நிகழ்வின் போது, ஆரம்பத்தில் சமைக்கப்பட்ட உணவை உட்கொண்ட வாங்காமம் பிரதேச மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இரண்டாவது கட்டமாக சமைத்த உணவே இவ்வாறு நஞ்சாகியுள்ளது.

இறக்காமம் வைத்தியசாலையில் போதிய வசதிகள் காணப்படாமையால் கல்முனை, அக்கரைப்பற்று, அம்பாறை, சம்மாந்துறை, மட்டக்களப்பு உள்ளிட்ட அனைத்து வைத்தியசாலைகளில் இருந்தும் அம்புலன்ஸ் வாகனங்கள் வரவழைக்கப்பட்டு, பாதிக்கப்பட்டோர், மேற்படி வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

அவர்களுக்கான சகல வைத்திய சிகிச்சைகளையும், அவர்களுக்குத் தேவையான வைத்திய மருந்து வகைகளையும் வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் நேரடியாக அந்த இடத்துக்கு விஜயம் மேற் கொண்டு ஏற்பாடுகளை செய்துள்ளார்.

இதேவேளை, கந்தூரி நிகழ்வில் அந்த உணவுகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் தொடர்பில் சுகாதார மருத்துவ அதிகாரிகளால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பயன்படுத்தப்பட்ட பொருள்களில் எவ்வித காலாவதியான பொருள்களும் காணப்படவில்லை என்று ஆரம்பக் கட்டப் பரிசோதனைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மூன்று கர்பிணித்தாய்மார்கள் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

## அம்பாறையில் 15 பேருக்கு சிவப்பு அறிவித்தல்

அம்பாறை, ஏப். 08

அம்பாறை, மாளிகைக்காடு பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய வகையில் இடங்களை வைத்திருந்த 15 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறைப் பொலிஸ் நிலைய சுற்று சூழல் பாதுகாப்பு பொறுப்பதிகாரி எம்.எஸ். அப்துல் மஜீட் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் பிரதேசசபையினர் இணைந்து, நேற்றுமுன்தினம் மேற்கொண்ட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்திலேயே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளவர்கள் தமது காணிகளை 3 நாள்களுக்குள் துப்புரவு செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக நீதி மன்றத்தினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

நேற்று 160 வீடுகள் பரி சோதிக்கப்பட்டன. அத்துடன் வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாகத் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.-என்றார். (எ)

## வன திணைக்கள அதிகாரியை தாக்கிய மூன்று பேர் கைது!

திருகோணமலை, ஏப்.08

திருகோணமலை, மொறவெவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டி-01 பகுதியில், வனதிணைக்கள அதிகாரியைத் தாக்கினர் எனக் கூறப்படும் 3 பேரை நேற்று முன்தினம் இரவு தாம் கைது செய்துள்ளனர் என்று மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

பன்குளம் டி-01 பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரங்கள் வெட்டப்படுகின்றன என்று கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அங்கு சென்ற வனதிணைக்கள அதிகாரியுடன், ஏற்பட்ட வாக்கு வாதம் கைகலப்பாக மாறியதாகவும் தெரியவருகிறது.

தாக்குதலுக்குள்ளான வன திணைக்கள அதிகாரியான தினேஷ் ரொஷாந்த (வயது 37) திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்திய மூவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## கிழக்கு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா பிற்போடல்


மட்டக்களப்பு, ஏப்.08

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 21ஆவது பொதுப் பட்ட மளிப்புவிழா, இன்று சனிக்கிழமை வந்தாறுமூலையில் நடைபெறவிருந்த நிலையில், தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று அந்தப் பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த விழாவை நடத்துவதற்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் நிர்வாகம் தெரிவித்தது.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்பின் பதிவாளர் அலுவலகம் 065-- 2240533 மற்றும் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் 065-2240584 ஆகியோருடன் தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்புகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பு: ஆலையடிவேம்பு மக்கள் கடும் எதிர்ப்பு!



அம்பாறை, ஏப்.08

அம்பாறை, ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கு உட்பட்டநாவற்காடுப் பிரதேசத்தில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு அந்தப் பிரதேச மக்கள் நேற்றுமுன்தினம் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மக்கள் செறிந்துவாழும் நாவற்காடுப் பிரதேசத்தில் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பதற்கான ஆரம்பக்கட்டப் பணியில் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனம் ஒன்று ஈடுபட்டிருந்தது.

அவ்வேளையில் அங்கு ஒன்றுகூடிய அந்தப் பிரதேச மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். அவர்கள் கூறியவை வருமாறு:-

தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பதால் சுற்றாடலுக்கும் அங்கு வசிப்பவர்களுக்கும் எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படும். எனவே, கோபுரம் அமைப்பதற்காக தோண்டப்பட்ட குழிகளை உடனடியாக மூட வேண்டும்.

பொதுமக்களைப் பாதிக்கும் எந்தவித நடவடிக்கைக்கும் இடங்கொடாமல், இந்தத் திட்டத்தை நிறுத்தி பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டும். கடந்தசில மாதங்களுக்கு முன்னர் இங்கு கோபுரம் அமைக்கவுள்ளதாக அறிந்த நாம், அரச அதிகாரிகளுக்கும் பிரதேச சபைக்கும் கடிதம் அனுப்பினோம். எனவே இதற்கு யார் அனுமதி கொடுத்தார்கள்?

இதுதொடர்பில் ஆலையடிவேம்புப் பிரதேச சபைச் செயலாளர் வி.கமலநாதன், கூறியவை வருமாறு:-

''பல திணைக்களங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதிக்கு அமையவே நானும் இதற்கான அனுமதி வழங்கினேன். இருப்பினும், மக்களின் கோரிக்கைக்கு அமைய இங்கு தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பதை நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார். (எ)

## கிழக்கு மாகாண சுற்றுலா சபை பணிப்பாளராக அபூபக்கர்

கிழக்கு மாகாண சுற்றுலா சபையின் பணிப்பாளராக சர்ஜூன் அபூபக்கர் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டால் நியமிக்கப்பட்டுள்ளார்

கிழக்கு மாகாண சுற்றுலா மற்றும் சூழல் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் சுற்றுலா சபைக்கான பணிப்பாளருக்கான நியமனக் கடிதத்தை கொழும்பிலுள்ள முதலமைச்சர் காரியாலயத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் வழங்கினார்.

நியமனம் வழங்கும் சந்தர்ப்பத்தில் சுற்றுலா சபையின் தலைவர் சந்திரா மொஹறட்டி மற்றும் ஆஸ்திரேலிய முதலீட்டாளர் ஒருவரும் பங்கேற்றிருந்தார்.

இதற்கு முன்னர் வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளராகவும், முன்னாள் நாடாளுமன்ற விவகார அமைச்சரின் ஆலோசகராகவும், மகளிர் மற்றும் சிறுவர் திறன் அபிவிருத்தி அமைச்சின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான இணைப்பாளராகவும் மற்றும் சுகாதார பிரதியமைச்சரின் ஊடக செயலாளராகவும், சர்ஜூன் அபூபக்கர் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனி இராஜதந்திரிகளுக்கான கருத்தரங்கில் இலங்கை பொருளாதார வாய்ப்புகள் குறித்து கவனம்!

கொழும்பு, ஏப். 08

கொழும்பில் ஜேர்மனி இராஜதந்திரிகளுக்காக நடத்தப்பட்ட இரண்டு நாள் கருத்தரங்கில், இலங்கை மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் பொருளாதார வாய்ப்புகள் என்ற விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மாறி வரும் பொருளாதார வளர்ச்சி, அரசியல் மாற்றங்கள், மற்றும் பாதுகாப்பு சூத்திரங்களின் பின்னணியில் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தை மையப்படுத்திய அரசியல், பொருளாதார ஈர்ப்பு அதிகரித்து வருகிறது.

இதனால் முன்னெப்போதையும் விட, ஒத்துழைப்பும், கலந்துரையாடலும் அதிகம் தேவைப்படுகின்றன. எனவேதான், இந்தியப் பெருங்கடலின் நடுவில் உள்ள நாடான இலங்கையில், பிராந்திய ஜேர்மனியத் தூதுவர்களுக்கான கருத்தரங்கை நடத்துவதற்கு ஜேர்மனி வெளிவிவகார அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது.




கொழும்பு தாஜ் சமுத்ரா விடுதியில், கடந்த 5 ஆம், 6ஆம் திகதிகளில் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இதில், இந்தியப் பெருங்கடல் நாடுகளுக்கான 30இற்கும் மேற்பட்ட ஜேர்மனித் தூதுவர்கள் மற்றும் ஜேர்மனி வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.


ஜேர்மனி வெளிவிவகார அமைச்சின் செயலர் மார்க்கஸ் எர்டெரர் இந்தக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார். முதல் நாள் நிகழ்வில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றியிருந்தார்.

இந்தியப் பெருங்கடலில் மூலோபாய மாற்றங்கள் என்ற தொனிப்பொருளில் இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, இந்தோனேஷியாவின் கடல்சார் விவகாரங்களுக்கான பிரதி ஒருங்கிணைப்பு அமைச்சர் ஆரிப் ஹவாஸ் ஓக்ரோசினோ, ஓமானின் இராஜதந்திர விவகாரங்களுக்கான பதில் அடிநிலைச் செயலர் கலாநிதி மொகமட் அவாட் அப்துல் ரஹ்மான் ஆகியோர் உரையாற்றினார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கில், இலங்கை மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் பொருளாதார வாய்ப்புகள் என்ற விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இந்தக் கருத்தரங்கின் நிறைவு நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சீனக்குடா எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்க இலங்கை முடிவு!



கொழும்பு, ஏப். 08

திருகோணமலை- சீனக்குடாவில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்கி, கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசு முடிவு செய்துள்ளது என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனக்குடா எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக இலங்கை அரசுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தன.

இந்த நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்துவுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களை அடுத்தே, இந்த எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்கி கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.


எனினும், 10 எண்ணெய்க் குதங்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வசம் வைத்திருப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

## கப்பலில் இருந்து தொடர்ந்தும் புகை; தீயணைப்பு நடவழக்கைகள் நீழப்பு!

கொழும்பு, ஏப். 08

கொழும்புக்கு அப்பால் தீப்பிடித்த எம்.வி.டானியேலா என்ற பனாமா நாட்டுக் கப்பலில் இருந்து தொடர்ந்தும் வெண்ணிறப் புகை கிளம்பிக் கொண்டிருக்கிறது என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து 120 கடல் மைல் தொலைவில் பயணித்துக் கொண்டிருந்த போது, கடந்த செவ்வாய்க்கிழமை எம்.வி.டானியேலா என்ற கொள்கலன் கப்பலில் தீப்பற்றியது.



கொள்கலன்களில் இருந்த பொருள்களிலேயே தீப்பிடித்த நிலையில், கொழும்புத் துறைமுகத்துக்கு அவசர உதவிக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

உடனடியாகவே இலங்கைக் கடற்படை விரைந்து சென்று தீயணைப்பு மற்றும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டது. இந்தியக் கடற்படை மற்றும் கடலோரக் காவல்படையின் உதவியும் பெறப்பட்டது.

இதன் மூலம் கடந்த புதன் கிழமை தீ பரவுவது கட்டுப்படுத்தப்பட்டது.

எனினும், கொள்கலன்களில் இருந்து வெண்ணிறப் புகை வந்து கொண்டிருப்பதால், இந்தியக் கடலோரக் காவல்படையின் சூர் என்ற கப்பலும், இலங்கைக் கடற்படையின் சாகர என்ற கப்பலும், தொடர்ந்து நீரைத் தெளித்து வருகின்றன.

இலங்கை விமானப்படை உலங்கு வானூர்தி ஒன்றும் இந்தத் தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தியக் கடற்படையின் காரியல் மற்றும் தர்ஷக் ஆகிய கப்பல்களும், இலங்கைக் கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகுகளும் கப்பலுக்கு அண்மையில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளன.

தற்போது கொழும்புத் துறைமுகத்தில் இருந்து 14 கடல் மைல் தொலைவில் கப்பல் நிறுத்தப்பட்டுள்ளது.

கப்பலில் ஏற்பட்ட தீயினால் பல கொள்கலன்கள் எரிந்து கருகிப் போயுள்ளன.

இந்தக் கொள்கலன்களில் என்ன பொருள்கள் இருக்கின்றன என்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, கப்பலில் ஏற்பட்ட தீயினால் கடலில் எண்ணெய்க்கசிவுகள் அல்லது இரசாயனக் கசிவுகள் ஏற்பட்டுள்ளனவா என்றும் ஆய்வுகளும், விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


## எட்கா குறித்து முடிவெடுக்க இந்தியா செல்கிறார் ரணில்!

கொழும்பு, ஏப். 08

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எட்கா எனப்படும் பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு தொடர்பான இறுதி முடிவுகளை எடுப்பதற்காகவே பிரதமர் ரணில் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ஜப்பானுக்கு மேற்கொள்ளவிருக்கும் பயணத்தை அடுத்து, இந்தியாவுக்கான பயணத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்வார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்தப் பயணத்தின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்தியாவின் உயர்மட்ட அரசியல் தலைவர்களை அவர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகை பகிரங்கமாகிறது!

கொழும்பு, ஏப். 08

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகை தொடர்பான பதிவுகள் எதிர்வரும் மே 1ஆம் திகதி தொடக்கம் பகிரங்கப்படுத்தப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகைகள் பற்றிய தகவல்கள். மே மாதம் தொடக்கம் இணையத்தளத்தில் வெளியிடப்படும். இது குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகை குறைவாக இருப்பதைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு அரச தரப்பில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் கட்டாயம் பதிலளிக்க வேண்டும் என்றும் நிலையியல் கட்டளையில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் பெண் ஒருவர் உயிரிழப்பு!



கொழும்பு, ஏப். 08

குவைத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த விமானத்தில் பயணித்த பெண் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந் துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் வீட்டுப்பணிப்பெண்ணாக வெளிநாடு சென்று திரும்பியவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி பெண் தொடர்பான விவரங்களும், உயிரிழப்புக்கான காரணமும் இதுவரை கண்டறியப்படவில்லை.

தற்போது இறந்தவரின் சடலம் மேலதிக விசாரணைகளுக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில்பணிப்பெண்களாக மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்கள் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர் அத்துடன், உயிரிழக்கும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துச் செல்கின்றமைகுறிப்பிடத்தக்கது. (எ)

# சிறுபான்மையினர் இடையே முரண்பாடுகளை ஏற்படுத்துவோர் குறித்து எச்சரிக்கை தேவை

## மட்டு.மாவட்ட எம்.பி.ஸ்ரீநேசன் மக்களுக்கு வேண்டுகோள்

நாட்டிலுள்ள சிறுபான்மை இனக் கட்சிகளுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தத் துடிக்கும் சுயநலவாதிகள் தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் சூழ்நிலை தொடர்பில் அவர் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சலுகை அரசியல், சந்தர்ப்பவாத அரசியல், பிரித்தாளும் தந்திரம், பரஸ்பர சந்தேகம் ஆகியவற்றால் சிறுபான்மையினச் சமூகங்கள் எதிரும் புதிருமாக உள்ளன. இவ்வாறான நிலைப்பாடுகளே பேரினவாதத்துக்கு வேண்டியவை. ஆயினும், இவ்வாறான நிலைப்பாடுகளை சிறுபான்மையினச் சமூகங்கள் விரும்பியோ, விரும்பாமலோ நிறைவேற்றியுள்ளன.

சிறுபான்மை இனக் கட்சிகளுக்குள் சிலர் மேலும், மேலும் முரண்பாடுகளை ஏற்படுத்தி பேரினவாதத்துக்குத் தீனிபோட்டு தரகுப் பணம் அல்லது சலுகைகளைப் பெறத் துடிக்கின்றனர். இவ்வாறான சதித்திட்டம் தீட்டி சிறுபான்மை இன மக்களுக்கு நன்மை செய்வது போன்று நடித்து, நுட்பமான பொறிமுறை ஊடாகச் பேரின வாதிகளுக்கு உதவுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் கட்சிகள், மலையகத் தமிழ்க் கட்சிகள் ஆகியவற்றுக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்தவே விரும்புகின்றனர்.

சிறுபான்மையினம் எவ்வாறு போனாலும் பரவாயில்லை என்பதே இப்படியான சுயநலவாதிகளின் நோக்கம். அவர்களின் சுயரூபத்தை சிறுபான்மை இன மக்கள் மட்டுமல்ல, பெரும்பான்மை இன மக்களிலும் கணிசமானவர்களை அடையாளம் கண்டுள்ளனர்.- என்றுள்ளது. (எ)

# தினசரி ராசி பலன் 08.04.2017

துர்முகி வருஷம் 2017 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 26 ஆம் நாள் துவாதசித்திதி. காலை 9.00 மணி வரை. பின்னர் திரயோதசி. நட்சத்திரம்: பூரம் இரவு 12.32 மணி வரை. பின்னர் உத்தரம். சித்தயோகம் இரவு 12.32 மணி பின்னர் அசுபயோகம். ராகுகாலம்: பகல் 9.08 மணி முதல் 10.40 மணி வரை. சுபநேரம்: மாலை 3.01 மணி முதல் 4.31 மணி வரை. இன்று சனிப்பிரதோஷ விரதம். திவசம் செய்யவேண்டிய திதி: பங்குனிமாத வளர்பிறை திரயோதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: பூரம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்பமான நாள். எண்ணிய காரியம் துல்லியமாய் நிறைவேறும். திருமண காரியங்கள் தங்கு தடையின்றி ஒப்பேறும்.

**ரிஷபம்:** கவலையான நாள். பொருளாதாரம் நலிவடையும். கொடுக்கல், வாங்கலில் மனஸ்தாபமும், உயர் அதிகாரிகளிடம் கடினப் போக்கும் நிலவும்.

**மிதுனம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. தனவிரயம் உண்டாகும். குடும்பத்தில் வீண்பகை, தாய் தந்தையருடன் கருத்து வேறுபாடுகள் உண்டாகும்.

**கடகம்** : சுபீட்சமான நாள். தொழிலில் நல்ல வரவும், சரளமான போக்கும் காணப்படும். வீடு, வாகன வசதிகள் பெருகும்.

**சிம்மம்** : உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். சகோதர வழி உதவிகள் கிட்டும். வியாபாரம் செழிப்படையும்.

**கன்னி:** சஞ்சலம் மிகுந்த நாள். மனதில் யோசனை கவலை அதிகரிக்கும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். தொழிலில் கவனக் குறைவு உண்டாகும்.

**துலாம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. சுயதொழிலில் முன்னேற்றம் அடைவார்கள். பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேருவார்கள்.

**விருச்சிகம்:** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

**தனுசு:** மேன்மையான நாள். பொருளாதாரம் மேம்படும். நினைத்த காரியங்கள் நடக்கும். செய் தொழிலில் மேன்மை உண்டாகும்.

**மகரம்:** அலைச்சல் மிகுந்த நாள். தொழிலில் அலைச்சல் அதிகமாகும். தொழிலாளர்கள் வேலை வாய்ப்புகளைத் தேடித்திரிவார்கள்.

**கும்பம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். வீடு திருத்தும் வேலையில் செலவுகள் அதிகரிக்கும்.

**மீனம்:** யோகமான நாள். வீடு, வாகன யோகம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு உயர் பதவியும், ஏற்றமான வாழ்க்கையும் கிடைக்கும்.

சந்திராட்டமநாள்: உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2 ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இந்த நாளில் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

மத்திய வங்கியின் பிணைமுறிகள் கொள்வனவு;

# கடனுக்கான தாமத அபராதம் ட்ரஷரீஸிடம் மீளக் கையளிப்பு

மத்திய வங்கியின் பிணைமுறிகள் கொள்வனவுக்காகப் பெற்ற கடனுக்கான தாமதக் கட்டண அபராதமாக பெர்பெசுவல் ட்ரஷரீஸ் நிறுவனம் செலுத்திய கட்டணம் மீளக் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிணைமுறி மோசடிகள் தொடர்பான விசாரணை மேற்கொண்டுவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின்முன்னிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணையில் இது தெரியவந்துள்ளது.

மத்திய வங்கியின் மேலதிகப் பணிப்பாளர் வசந்த குமார அல்விஸ் இந்தத் தகவல்களை ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய பிணைமுறிக் கொள்வனவுக்காக பெர்பெசுவல் ட்ரஷரீஸ் நிறுவனம், மத்திய வங்கி மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியனவிடம் ஒருநாள் தவணை அடிப்படையில் குறுகிய காலக் கடனாக பெருந்தொகை ஒன்றைப் பெற்றுக்கொண்டிருந்தது.

எனினும், அந்தக் கடனை உரிய கால எல்லைக்குள் திருப்பிச் செலுத்தாத காரணத்தால் மத்திய வங்கியின் நிதிக்கட்டுப்பாட்டுப் பிரிவு பெர்பெசுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்துக்கு 808 லட்சம் ரூபா அபராதம் விதித்திருந்ததுடன், அந்த நிறுவனத்தால் அபராதமும் செலுத்தப்பட்டிருந்தது.

அதன்பின்னர் மத்திய வங்கியின் ஆளுநர் சபையால் பெர்பெசுவல் ட்ரஷரீஸ் நிறுவனம் செலுத்திய அபராதக் கட்டணத்தை திருப்பிச் செலுத்த தீர்மானம் நிறைவேற்றி, 808 லட்சம் ரூபாவையும் திருப்பிக் கையளித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. (எ)

# சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது!



கொழும்பு, ஏப். 08

கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் 13 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான சிகரட் பைக்கெற்றுக்களுடன் 38 வயதான நபர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 27 ஆயிரத்து 850 சிகரட்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்டவருக்கு 20 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பெண்கள் வெற்றியடையும்போது சமூகமும் வெற்றி அடையும்!

## கண்டி கண்காட்சி நிகழ்வில் அமெரிக்கத் தூதுவர்



பெண்களுக்காகக் கைகளைத்தட்டி ஆதரவளிக்கவேண்டும்பெண்கள்வெற்றியடையும் போது தான் சமூகம் வெற்றியடையும் என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷாப் தெரிவித்தார்.

மத்திய மாகாண பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அமெரிக்கத் தூதரகத்தின் அனுசரணையுடன் கண்டி அமெரிக்க தகவல் கூடத்தில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சியில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களாக உரு வாகுவதற்குத் தேவையான நம்பிக்கையையும் திறன்களையும் அபிவிருத்தி செய்வதற்குச்சிறப்பான திறமைகளைக் கொண்ட ஒதுக்கப்பட்ட பெண்களுக்கு இந்தத்திட்டம் பெரிதும் உதவியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பெண்கள் தன்னிறைவடைந்து அவர்களது குடும்பங்களுக்கு உதவுவதற்குத் தேவையான தகுதியையும் திறமையையும் வழங்கும் நோக்கில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி சோபனா இராஜேந்திரன் இந்தப் பயிற்சித் திட்டத்தை வடிவமைத்து நடைமுறைப்படுத்தியுள்ளார்.

பெண்களுக்கான தொழில் முயற்சித்திறனை வழங்கும் 5 மாத வேலைத் திட்டம் ஒன்றின் ஒரு நிகழ்வாகவே இந்தக் கண்காட்சி நடைபெற்றது.

சமூக ஊடகங்களின் பயன்பாடு மற்றும் வேறு வியாபார திறமைகள் என்பவற்றில் தீவிர பயிற்சிப் பட்டறைகள் இந்த இலவச வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.(எ)

காலைக்கதிர்



பொன்னையா சதீஸ்
கொக்குவில்



# மூத்தோரின் ஆலயமாக சிவபூமி

தொல்புரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்தின் பத்தாவது ஆண்டு பூர்த்தி விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முதியோர் இல்லத்தின் பாலச்சந்திரன் மண்டபத்தில் இடம்பெறும். சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்து மா மன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தம்பதியர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தம்பதியரும் இளைப்பாறிய கணக்காளர் வை. ஈழலிங்கம் தம்பதியரும் கலந்துகொள்வர்.

ஆசியுரைகளை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள், வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்த மகராஜ் ஆகியோர் வழங்குவர்.

வாழ்த்துரைகளை சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதனும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் வைத்தியர் செ. கண்ணதாசனும், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ரி.சத்தியமூர்த்தியும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து 'தரிசனம்' ஆவண ஒளிநாடா வெளியீடும் 'சிவபூமி நிழல்' சிறப்பு மலர் வெளியீடும், காவடி ஆட்டம், நாடகம், வில்லிசை, நடனம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறும். ஆவண நாடா வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு.பாலசண்முகனும் சிறப்பு மலர் வெளியீட்டுரையை 'வலம்புரி' ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் நிகழ்த்துவர்.

மூத்தோரை எம் முதுசொமாகப் பேணுதல் தமிழரின் உயர் பண்பாடாகும். மூத்தோரின் அனுபவ ஞானத்துக்கு வேறெதுவும் இல்லை. ''மூத்தோர் சொல் கேட்டல்'' என்பது முதுமொழி. ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது ஆன்றோர் வாக்கு. மேற்குறித்த பாரம் பரிய பண்பாட்டு நெறிமுறைகள் இன்று எம்மண்ணில் வற்றி வருகின்றமையைக் காணலாம். முதியோர்கள் இன்று தேவையற்றவர்களாகக் கைவிடப்படுகிறார்கள். பதவி, பட்டம், பணம், செல்வாக்கு இவையெல்லாம் நிரந்தரமல்ல. உயர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பெரியோர் அவர்களை மதித்தல், நாடித் தேடிச் செல்லல் மிகவும் அரிதாகி விடும். இதனால், முதுமையில் ஏற்படும் உடல் தளர்வுகளோடும் உளத்தளர்வுகளோடும் இன்று அவதியுறுபவர்களின் தொகை அதிகம். மேலைநாடுகளில் இளைப்பாறிய பின்பும் மூத்தோர் ஒன்று கூடுவதற்குப் பல ஏற்பாடுகள் உள்ளன. உதவியற்ற முதியோருக்கும் உதவுவதற்கும் பல ஏற்பாடுகள் உள்ளன. ஆனால், எம்மண்ணில் முதியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எல்லையில்லாதவை.

யாழ். குடாநாட்டில் என்றுமில்லாதவாறு ஆதரவற்ற முதியோர் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. சொந்தப்பிள்ளைகளே சிலர் முதுமையுற்ற தாய், தந்தையரைக் கவனிக்கத் தவறுகின்றார்கள். கணவனை இழந்து கைம்பெண்களாகத் தனித்து வாழ்பவர்கள் உறவினர் உதவியின்றித் தவிக்கிறார்கள். முதிர் கன்னிகளாகத் திருமணம் செய்யாத பெண்கள் இம்மண்ணில் பலர் உதவிகளின்றி உள்ளனர். பிள்ளைகளில்லாத மூத்தோர் உறவினரின் உதவியின்றி ஏக்கத்தோடு வாழ்கிறார்கள். தனித்திருந்த முதியோர் வீடுகளுக்குச்சென்று கொள்ளையர்கள் உடைமைகளைப் பறித்து அவர்களது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துகிறார்கள்.

இச்சூழலில் முதியோர்களைக் காப்பதற்காகத் தொல்புரத்தில் 07.04.2007 ஆம் ஆண்டு செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகனால் சிவபூமி முதியோர் இல்லம் என்ற பெயரில் ஓர் உன்னத முதியோர் காப்பகம் தொடங்கப்பட்டது. கடந்த பத்தாண்டுகளாக பல ஆதரவற்ற மூத் தோருக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களுக்குரிய சகல தேவைகளையும் பூர்த்தி செய்து பாதுகாத்து வருவது உன்னத செயலாகும். சிவபூமி அறக் கட்டளை என்ற பெயரில் கடந்த பல வருடங்களாக எம்மண்ணில் நன்முயற்சிகள் நிறைவேறி வருகின்றமை நாம் செய்த பாக்கியமே. சொல்லும் செயலும் ஒன்றாகி நிற்பதே உண்மை ஆன்மீகம் ஆகும். எம்மண்ணில் செஞ்சொற்செல்வரால் உருவாக்கப்பட்ட எந்தவொரு பணியும் சமூகத்தால் மதிக்கப்படுகிறது. எந்தவொரு நிதியுமில்லாமல் கடவுள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு அவரது காரியங்கள் நிறைவேறி வருகின்றன.



அமெரிக்காவுக்கு ஆன்மீகச் சொற்பொழிவாற்றச் சென்றவருக்கு அங்கு நீண்டகாலமாக வாழும் தொழிலதிபர் கிருஷ்ணர் பாலச்சந்திரனின் தொடர்பு கிடைத்தது. அவர்களிடம் உதவி பெற்றுச் சிவபூமி முதியோர் இல்லத்தை ஆரம்பித்தார். இன்று அந்த இல்லம் பல கட்டடங்களோடு பெரிய நிலப் பரப்பில் அழகாகக் காட்சியளிக்கிறது.

சிவபூமி முதியோர் இல்லத்தில் அழகான ஒரு வைரவர் கோயில் அனைவரையும் வரவேற்கிறது. கோயில் மணியோசை கேட்டதும் மூத்தோர்கள் குடுகுடுவென காலையிலும் மாலையிலும் பிரார்த்தனைக்கு வருகிறார்கள். கோயில் திண்ணையிலிருந்து மெய்ம் மறந்து பாடி மகிழ்கிறார்கள். சிவாச் சாரியக் குடும்பத்தில் பிறந்த மூதாட்டி ஒருவர் கோயில் பூசைகளை நடத்தி வருகிறார். கோயிலுக்குச் சமீபமாகச் சிவபூமி மயிலகம் என்று மயில்களைப் பராமரிக்கும் காட்சியகம் அங்கு செல்பவர்களை மகிழ்விக்கிறது. முதியோர் வளர்க்கும் மயில்கள் பூசை வேளைகளில் தோகை விரித்து ஆடுகின்றன. என்ன அழகு, என்ன இயற்கை. சிவபூமி வளாகத்தின் வாயில் பகுதிகளிலேயே இக்காட்சி மனோரம்யமாகவுள்ளது. உள்ளே பல கட்டடங்கள் முதியோர் வசிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ளன.

பாலச்சந்திரன் மண்டபம், ரிஷி. தொண்டுநாதன் சுவாமிகள் மண்டபம், திருநெல்வேலி பத்மநாதன் மண்டபம், காரைநகர் வைத்தியகலாநிதி. செல்வி யமுனா மார்க்கண்டு மண்டபம், மலேசியா மகேஸ்வரி அம்மாள் மண்டபம், யோகர் சுவாமிகள் மண்டபம் என நவீன வசதிகளுடன் முதியோர் வாழ்வதற்கு மண்டபங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

முதியோர் இல்லத்தில் உயர் பதவி வகித்தவர்களும் இருக்கிறார்கள். படிப்பில் குறைந்தவர்களும் உள்ளார்கள். எவ்வித வேற்றுமையுமின்றி சமரசம் உலாவும் இடமாகச் சிவபூமி முதியோர் இல்லம் விளங்குகிறது. இவ் இல்லத்தில் வாழும் முதியவரில் ஒருவர் சமீபத்தில் தமிழ்த் தலைவர்களில் ஒருவராக விளங்கிய ஜி.ஜி. பொன்னம்பலம் பற்றிச் சிறப்பான ஒரு நூலை வெளியிட்டுள்ளார். இல்லத்தில் அமைந்துள்ள அறிவாலயம் என்ற நூல் நிலையத்தில் மூத்தோர் பத்திரிகைகளைப் படிப்பார்கள். பார்வைக் குறைபாடு உடையவர்களுக்காக தினமும் பத்திரிகைகள் உரத்து வாசிக்கப்படுகின்றன. வைத்திய சிகிச்சை நல்ல முறையில் நடைபெறுகிறது. தினமும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிவபூமி வாகனம் மாறி மாறிக் கிளினிக் நாளுக்குச் சென்று வருகிறது.

சிவபூமியில் வாழ்ந்த மூத்தோர்களில் இதுவரை ஐம்பத்து மூன்று பேர் இறைபதம் அடைந்துள் ளார்கள். இவர் களில் முப்பத்து இரண்டு பேர் களுக்குச் செஞ் சொற்செல்வர் கொள்ளிக்கடன் ஆற்றியுள்ளார் என்பது மெய் சிலிர்க்க வைக்கும் செய்தியாகும்.

எங்களுக்கு இங்கு ஒரு குறையுமில்லை. எங்கள் ஊர், எங்கள் உறவுகளை விட்டு வந்த கவலையைத் தவிர வேறொரு குறையுமில்லை. இவ்வார்த்தைகளைத் தான் அங்கு உள்ள முதியவர்கள் உச்சரிக்கிறார்கள்.

சிவபூமி இல்லத்தில் வாழும் மூத்தோர்கள் சுற்றுலாவுக்கும் கோயில்களுக்கும் செல்வதற்கு மனிதநேய அமைப்பால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பஸ் உதவுகிறது. குருபூசைகள், சமய விழாக்கள் யாவும் பிரதான மண்டபத்தின்மேல் மாடியில் அமைந்துள்ள பாலச்சந்திரன் அரங்கில் தவறாமல் நடந்துவருகின்றன. பல பாடசாலைகள் இந்த விழாக்களைப் பொறுப்பேற்று நல்ல முறையில் நடத்தி வருகின்றன.

சிவபூமியில் வாழ்ந்த மூத்தோர்களில் இதுவரை ஐம்பத்து மூன்று பேர் இறைபதம் அடைந்துள்ளார்கள். இவர்களில் முப்பத்து இரண்டு பேர்களுக்குச் செஞ்சொற்செல்வரே கொள்ளிக்கடன் ஆற்றியுள்ளார் என்பது மெய்சிலிர்க்க வைக்கும் செய்தியாகும். இன்று பெற்ற தாய், தந்தையர்க்கே கொள்ளி வைப்பதற்குப் பிள்ளைகள் வெளி நாட்டிலிருந்து வருவதில்லை. ஆனால், எவ்வித உறவுமில்லாது பெற்றால் தான் பிள்ளையா என்ற நிலையில் கடமை செய்வது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் கடமைகளோடு சிவபூமிக் கடமைகளையும் அறக்கட்டளை நிர்வாகிகளின் துணையோடும் பணியாளர்களின் உதவிகளோடும் ஆறு. திருமுருகன் நிறைவேற்றி வருகிறார். பல மேலைத்தேய நாடுகளுக்குச் சென்று ஆன்மீகச் சொற்பொழிவாற்றி அன்பர்களின் உதவியைப் பெற்று இவ் இல்லத்தை மேம்படுத்தியுள்ளார்.

தற்போது எழுபத்தொன்பது முதியோர்கள் சிவபூமி இல்லத்தில் வசிக்கிறார்கள். ஐந்துக்கும் மேற்பட்டோர் பாரிசவாத நோயால் படுக்கையில் இருக்கிறார்கள். மூன்று புற்று நோயாளர்கள் உள்ளனர். பெரும்பாலானவர்கள் சலரோக நோயோடு சஞ்சலப்படுகிறார்கள். சிவபூமி முதியோர் இல்லம் இருபத்து நான்கு மணித்தியாலமும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. முதியோர் இல்லமென்பது சாதாரண பணியல்ல மிகக் கடினமான பணி. இறையருளாலும் அன்பர்களின் பேராதரவினாலும் இப் பெரும் பணி தொடர்கிறது. சிவபூமி முதியோர் இல்லம் தொடர்ந்து ஆதர வற்ற மூத்தோரைக் காக்கும் ஆலயமாக மிளிர பத்தாவது ஆண்டுப் பூர்த்தி நாளில் அனைவரும் பிரார்த்திப்போமாக.

''ஆதரவற்றவரை அரவணைப்பதே ஆண்டவன் பணியாகும்''



# ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...? 143

பொன்.வேணு கிருஷ்ணா

ரஷ்யாவின் நட்பு நாடாக மெடிட்டரேனியன் கடற்பகுதியில் இருக்கும் ஒரே நாடு சிரியா மட்டும்தான். சிரியாவின் துறைமுகத்தைத் தவிர வேறெங்கும் ரஷ்யாவினால் இன்று தன்னுடைய கப்பலை நிறுத்தமுடியாத அளவுக்கு அமெரிக்காவின் ஆதிக்கம் உலகெங்கும் பரவியிருக்கிறது. அமெரிக்காவின் போர்க்கப்பல்கள் நிறுத்தப்படாத பகுதியே உலகில் இல்லை என்கிற நிலை உருவாகியிருக்கிறது. இதனால் அமெரிக்காவினால் எந்தவொரு நாட்டினையும் பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் மிரட்டமுடியும் என்றாகியிருக்கிறது. சோவியத் காலத்திலிருந்தே ரஷ்யாவுக்கும் சிரியாவுக்கும் இடையில் மிகநெருக்கமான உறவு இருந்துவருகிறது. அதனை எப்படியாவது உடைத்தெறியவேண்டும் என்பதும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் விருப்பமாக இருக்கிறது. அதற்காக சிரியாவைச் சுற்றி ஒரு வளையத்தை





திட்டமிட்டே அமெரிக்கா ஏற்படுத்தி வந்திருக்கிறது. இதனை ரஷ்யா நெருக்கடியிலிருந்த போது தடுக்கமுடியாமல் போனதால், அந்த வளையம் சிரியாவை நெருங்கி அருகில் வந்திருக்கிறது.

இஸ்ரேலில் ஓர் ஏவுகணைத் தளவாடம், துருக்கியில் ஓர் ஏவுகணைத் தளவாடம், சவுதி அரேபியாவின் உதவியோடு வளைகுடாப் பகுதியில் ஓர் ஏவுகணைத் தளவாடம் என்று அமெரிக்கா உருவாக்கிவிட்டது. இப்படியாக அமைக்கப்பட்ட ஏவுகணைத் தளவாடங்கள் ஒருபக்கம் சிரியாவையும் ஈரானையும் தன்னுடைய கட்டுப்பாட்டுவளையத்துக்குள் நேட்டோவின் ஊடாக அமைத்திருக்கிறது அமெரிக்கா. இதன்மூலம் ரஷ்யாவின் மீதமிருக்கிற நட்பு நாடுகளையும் இல்லாமல் செய்துவிடுவதே அமெரிக்காவின் நோக்கமாக இருக்கிறது. சிரியாவை மட்டும் இல்லாமல் செய்துவிட்டால், மத்திய கிழக்கில் சிரியாவுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லாமல் போய்விடும். ஈரானுக்கு துணையில்லாமல் போய்விடும். அதன்பிறகு துருக்கி, இஸ்ரேல், சவுதி அரேபியா உள்ளிட்ட அமெரிக்காவின் தலையாட்டி தேசங்களின் உதவியோடு ஒட்டுமொத்த மத்திய கிழக்கையும் ஆட்டிப்படைக்கலாம்; எண்ணெய் வளத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்; ரஷ்யா மற்றும் சீனாவின் பொருளாதாரத்தைச் சிதைக்கலாம் என்பதே அமெரிக்காவின் திட்டம். சிரியாவை இல்லாமல் செய்துவிடுவது, அல்லது சிரியாவை பல நாடுகளாக உடைத்துவிடுவது, அல்லது சோமாலியாவைப் போன்ற நிலையற்ற அரசு கொண்ட நாடாக சிரியாவை மாற்றுவது ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்து முடித்துவிட்டால், தனது திட்டம் நிறைவேறிவிடும் என்பதே அமெரிக்காவின் எண்ணம். இதுதான் சிரியாவைச் சுற்றி இவ்வளவு நாடுகள் வட்டமிடுவதற்குக் காரணம். இப்படிப்பட்ட திட்டம் ஏற்கனவே லிபியாவில் நிறைவேற்றப்பட்டது என்பதால், அதனையே சிரியாவிலும் நடைமுறைப்படுத்த அமெரிக்கா திட்டமிட்டிருக்கிறது.

சிரியாவை இல்லாமல் செய்துவிடுவது என்று முடிவெடுத்துவிட்ட பின்னர், அதற்கான வழி மிக எளிதாகத் தோன்றியது அமெரிக்காவிற்கு. சிரிய பாத் கட்சியின் தலைமையிலான கூட்டணி ஆட்சியைக் கவிழ்த்துவிட்டாலே போதும் என்று கணக்குப் போட்டது அமெரிக்கா. அதற்காக மிகவும் பிற்போக்கான தீவிரவாத இயக்கங்களுக்கு ஆயுதங்களை வழங்கி அரசுக்கு எதிரான கலகங்களை ஏற்படுத்திப் பார்த்தது. சவுதி அரேபியா மூலமாக ஆயுதங்களை வழங்கியும், துருக்கி வழியாக பயங்கரவாதிகளை அனுப்பியும் அதற்கான பணிகள் துவக்கப்பட்டன. யாருடைய நலனுக்காக சிரியாவை ஆக்கிரமிக்க நினைக்கிறோம் என்றுகூட தெரியாத சில ஆயுதக்குழுக்களும் இதில் அடங்கும். ஸ்லீப்பர் செல்களைப் போன்று, ஸ்லீப்பர் பயங்கரவாத இயக்கங்கள் அவை என்றுகூட சொல்லலாம். தனது நாட்டின் சிறைகளில் இருக்கும் மரண தண்டனைக்கைதிகள் பலரை மூளைச் சலவை செய்தும் அவ்வியக்கங்களுக்கு சவுதி அரேபியா அனுப்பியதற்கான ஆதாரங்களும் வெளியாகியிருக்கின்றன. இப்படியாக கடந்த சில ஆண்டுகளாக செயற்பட்டுக்கொண்டிருந்த இயக்கங்கள் இணைந்தே ஐ.எஸ்.ஐ.எஸ். ஆக உருமாறியிருக்கின்றன. சிரியாவை அழிப்பதற்கோ உடைப்பதற்கோ, ஆக்கிரமிப்பதற்கோ, துருக்கி உதவுவதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. நெசவுத்தொழிலில் மத்திய கிழக்குப் பிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்தும் நாடாக சிரியாதான் இருந்து வருகிறது. துருக்கிக்கு மிகப்பெரிய போட்டியாளராக இருப்பதும் சிரியாதான். அதனால் சிரியா வீழ்ந்துபோவதை துருக்கி விரும்புகிறது. சிரியா வீழ்வதன்மூலம், தனது பொருளாதாரம் மேம்படும் என்பது துருக்கியின் கணக்கு. அதற்கேற்றாற்போல், சிரியாவில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்த நெசவாலைகள் பிரித்தெடுக்கப்பட்டு துருக்கியின் சந்தையில் தான் விற்கப்படுகின்றன.

ரஷ்யாவுடன் எல்லையைக் கொண்டிருக்கும் ஜோர்ஜியாவில் ஏவுகணைத் தளவாடம் அமைப்பதன் மூலம் ரஷ்யாவுக்கு மற்றொரு பக்கத்திலிருந்து நெருக்கடி கொடுக்க அமெரிக்கா முனைந்தது. ஆனால், அங்கே ரஷ்யாவால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு சிறிய தேசங்களால் அது நடக்காமல் போனது. அதன்பிறகுதான், உக்ரைன் பக்கமாக தனது கவனத்தைத் திருப்பியது அமெரிக்கா. "தி கிராண்ட் செஸ்போர்ட்" என்கிற நூலில், அமெரிக்கா கவனம் செலுத்தவேண்டிய மிகமுக்கியமான எல்லை உக்ரைன்தான் என்று பிரெசின்ஸ்கீ குறிப்பிட்டிருந்தார். அதன்படி, உக்ரைனில் நேட்டோவை நுழையச் செய்து ரஷ்யாவுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டது. மிகப்பெரிய நிலப்பரப்பையும், அதிகளவிலான விவசாய நிலங்களையும் கொண்ட நாடு உக்ரன். ஏற்கனவே உக்ரைனின் 92 மில்லியன் ஹெக்டேயர் விளை நிலங்கள், பிரிட்டனின் வேளாண் நிறுவனங்களின் வசம்தான் இருக்கின்றன. இதற்குமேலும் நேட்டோவையோ அமெரிக்காவையோ பிற மேற்குலக நாடுகளையோ நுழைய விட்டால், பெரும் ஆபத்து என்பதால் ரஷ்யாவின் ஆதரவுப் பகுதியான கிரிமியாவை சுயாட்சிப் பிரதேசமாக அங்கீகரித்தது ரஷ்யா. கிரிமியாவை மட்டும் இழந்துவிட்டால், ரஷ்யாவுக்கென்று ஒரேயொரு கப்பற்படைத் தளம்கூட இல்லாமல் போய்விடும். அதன்பிறகு ரஷ்யாவை வீழ்த்துவதும் கட்டுப்பாட்டுக்குள் வைப்பதும் அமெரிக்காவிற்கு மிக எளிதானதாக மாறிவிடும். ஒருபுறம் சிரியாவை இழந்தால், அங்கேயிருக்கும் கப்பற் படைத்தளத்தை ரஷ்யா இழக்க நேரிடும்; மறுபுறம் கிரிமியாவை (உக்ரைன்) இழந்தால், அங்கேயிருக்கும் கப்பற்படைத்தளத்தையும் ரஷ்யா இழக்கநேரிடும். ஆதனால் உக்ரைனும், கிரிமியாவும், சிரியாவும், ரஷ்யாவுக்கு




வாழ்வா சாவா போராட்டம்.

இந்தப் பின்னணியினை அறிந்து கொண்டால், சிரியாவையும், உக்ரைனையும், கிரிமியாவையும் தக்கவைத்துக் கொள்ளப் போராடும் ரஷ்யா ஒரு ஏகாதிபத்திய நாடாக இவற்றைச் செய்யவில்லை என்பது நமக்கு நன்கு விளங்கும். அப்பகுதிகளை ஆக்கிரமித்து ஆதிக்கம் செலுத்துவது ரஷ்யாவின் நோக்கமல்ல என்றும் தன்னுடைய பாதுகாப்பையும் தன்னுடைய நண்பர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கே ரஷ்யா போராடிக்கொண்டிருக்கிறது என்பதையும் நம்மால் புரிந்து கொள்ளமுடியும்.

சிரியாவில் இறங்கிக்கொண்டிருக்கும் பாசிஸப் பயங்கரவாத அமைப்புக்களில் 8000 பேர் செசன்யாப் பகுதிகளிலிருந்து வந்தவர்களாவர். ஒருவேளை சிரியாவில் நடக்கும் போரில் ஐ.எஸ்.ஐ.எஸ். உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புக்கள் வெற்றிபெற்றால், அவர்கள் ரஷ்யாவின் செசன்யாப் பகுதிகளுக்குச் சென்று அங்கேயும் பயங்கரவாத நடவடிக்கைகளில் இறங்கப்போவது உறுதி. அதற்கான எல்லா முகாந்திரமும் இருக்கின்றன. ரஷ்யாவின் மிகப் பெரிய மற்றொரு கவலை இதுதான். எல்லைகள் வரை வந்திருக்கும் பிரச்சினைகள், அதன்பிறகு நாட்டிற்குள்ளும் வந்துவிடும். அதையே காரணம் காட்டி, ரஷ்யாவுக்குள்ளும் குண்டுகள் வெடிக்கும், நேட்டோ உள்நுழையும், ஐ.நா.சபை தலையிடும்; இறுதியில் ரஷ்யாவே நிலைகுலைந்து போவதற்கான அத்தனை சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன என்று ரஷ்யா அஞ்சுவதில் நியாயமிருக்கிறது. சிரியாவுக்கு ரஷ்யா உதவுவதற்கு இதுவும் மற்றொரு காரணம்.

## தெரிந்த அமெரிக்காவின் தெரியாத கதை

1945 இல் அமெரிக்காவின் சங்க்ரேடி கிரேஸ்டோ மலைப்பகுதியில் ஒரு கட்டடத்தில் உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகள் ஒன்றுகூடி விடியற்காலைப் பொழுதைப் பதற்றத்துடன் எதிர்நோக்கியிருந்தனர். விஞ்ஞானி ஒப்பன் ஹைமரின் தலைமையில் மனிதகுல வரலாற்றிலேயே மிகப்பெரிய அழிவை ஏற்படுத்தக்கூடிய அணுவாயுதத்தைப் பரிசோதித்த நாள்தான் அது. அப்பரிசோதனைக்கு "டிரினிடி" என்று பெயர் சூட்டியிருந்தார்கள். அதேவேளையில், அவ்விடத்துக்குச் சில மைல் தூரத்தில் விஞ்ஞானிகள் குழுவின் கண்காணிப்பில், பிரிகேடியர் ஜெனரல் லெஸ்லி க்ரோவ்ஸின் தலைமையில் அமெரிக்காவின் போர் தலைமையகம் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. சூரியனை விட மிகப்பெரிய ஒளியை எழுப்பி, காலை 5 மணி 29 நிமிடங்கள், 45 வினாடிக்கு உலகின் முதல் அணு குண்டு பரிசோதிக்கப்பட்டது.

"No I am become death, the destroyer of worlds"

என்கிற பகவத் கீதையின் வரிகளை நினைவுகூர்ந்து பரிசோதனைச் செய்தியினை வெளியிட்டார் ஒப்பன்ஹைமர். இன்றைக்கு முழுமையான இராணுவ அரசாக பரிணமிக்கும் அமெரிக்காவின் பயணத்திற்கு அன்றைய அணுகுண்டுப் பரிசோதனை மிகப்பெரிய அடிக்கல் நடும் விழாவாக இருந்தது.


(கேள்வி தொடரும்...)

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




110

## யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுகள்

### பிரெஞ்சு நடுவர் பற்றிய சர்ச்சை

தமிழ் மக்களின் அன்றாட ஜீவாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு விடுதலைப் புலிகள் முன்வைத்த நியாயமான, யதார்த்தமான கோரிக்கையை சந்திரிகா அரசு பிடிவாதமாக, தொடர்ச்சியாகப் பரிசீலனை செய்ய மறுத்து வந்தபோது அதற்கு ஓர் அடிப்படையான காரணம் இருக்க வேண்டும் என நாம் கருதினோம். அதாவது, சிங்கள இராணுவத்தின் கேந்திர நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்குடனேயே அரசாங்கம் இந்த இறுக்கமான கடும்போக்கைக் கடைப்பிடிக்கிறது என நாம் எண்ணினோம். ஆனால், இதுவே முதற்தடவையாக ஜனாதிபதி சந்திரிகா தமது அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தெட்டத்தெளிவாக, எவ்வித மூடிமறைப்புமின்றிப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை வழங்கினால், பாரதூரமான இராணுவ விளைவுகள் உருவாகலாம் என்றும் 'தேசியப் பாதுகாப்பு' விவகாரத்தில் நெகிழ்ந்து கொடுக்க முடியாது என்றும் அவர் அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார். வாழ்க்கைப் பிரச்சினைகளில் தொடங்கி, அரசியல் பிரச்னை வரைக்கும் படிப்படியாக, கட்டம் கட்டமாகப் பேச்சுகளை முன்நகர்த்திச் செல்லும் விடுதலைப் புலிகளின் அணுகுமுறையையும் சந்திரிகா திட்டவட்டமாக நிராகரித்தார். ஒட்டுமொத்தத்தில் பார்த்தால், அரசியல் பேச்சுக்கு முன்னதாக இயல்புநிலையும், நிலையான அமைதியும் உருவாக வேண்டும் என்ற புலிகளின் அடிப்படையான யோசனையை அரசாங்கமும் சிங்கள இராணுவத் தலைமையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது சந்திரிகாவின் கடிதம் மூலமாகத் தெளிவாகத் தெரிந்தது. சிறிலங்கா அரசு தனது அணுகுமுறையையும் கொள்கை நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தி, விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை முற்றாக நிராகரித்துள்ளதால் நாமும் எமது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

முதலாவதாக, தமிழர் தாயகம் மீதான பொருளாதார முற்றுகையைத் தளர்த்துவதற்குப் பதிலாக சந்திரிகா அரசு இறுக்கிக் கொண்டே வந்தது. பல்வேறு பொருள்களுக்குத் தடை நீக்கம் செய்துள்ளதாகக் காலத்துக்குக் காலம் அரசு அறிக்கைகளை வெளியிட்ட பொழுதும், அப்பொருள்கள் மக்களுக்குக் கிடைப்பதில்லை. எரிபொருள்கள், உர வகைகள், சிமெந்து, இரும்புக்கம்பிகள் ஆகியன இராணுவப் பாவனைப் பொருள்களாகக் கருதப்பட்டு நிரந்தரத் தடைக்கு இலக்காகி இருந்தன. பேச்சுகளின் போதும், கடிதப் பரிமாற்றங்களிலும் அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடையை நீக்குமாறு எமது இயக்கம் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்தும் அரசாங்கம் நெகிழ்ந்து கொடுக்கவில்லை. விடுதலைப் புலிகள் ஒருபுறமிருக்க, தமிழ் மாவட்ட அரச அதிபர்கள், குடிமக்கள் குழுக்கள், பொதுசன சம்மேளனங்கள், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், சர்வதேச அமைப்புகள் ஆகியன தொடர்ச்சியாக, மன்றாட்டமாக விடுத்த வேண்டுகோளுக்கும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. இறுதியாக, இந்த வெகுசன அமைப்புகள், மனிதாபிமானத்தின் அடிப்படையில், சர்வதேச மனித உரிமை நிறுவனங்களிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்தன. ஆயினும், அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன என அரசாங்கம் மேற்கொண்ட தீவிரப் பொய்ப் பிரசாரம் உலகத்தின் மனசாட்சியை மௌனிக்கச் செய்தது.

இரண்டாவதாக, சர்வதேசக் கண்காணிப்புக் குழுவின் மேற்பார்வையில் ஒரு நிலையான, நிரந்தரமான போர் நிறுத்தம் உருவாக்கப்பட வேண்டுமென நாம் விடுத்த வேண்டுகோளையும் அரசாங்கம் வேண்டுமென்றே நிராகரித்து வந்தது. ஒரு நிலையான போர் நிறுத்தத்துக்குப் பதிலாக, ஒரு நிலையற்ற தற்காலிக பகை நிறுத்தத்தையே அரசு விரும்பியது. இந்தப் பகை நிறுத்த உடன்பாட்டுக்கும் விரிவான, விளக்கமான விதிகளைக் கொண்ட நடைமுறைத்திட்டத்தை வகுக்கவும் நாம் தொடர்ச்சியாக விடுத்து வந்த வேண்டுகோளையும் அரசாங்கம் நிராகரித்துள்ளது. இதிலிருந்து, ஒரு நிலையான சமாதானத்தையும், இயல்புநிலையையும் தோற்றுவிப்பதில் அரசாங்கத்துக்கு நேர்மையான அக்கறை இருக்கவில்லை என்றே எமக்குத் தென்பட்டது.

மூன்றாவதாக, கடற் புலிகளின் நடமாட்டத்தை முற்றாக முடக்கி, வடக்குக் கிழக்குப் பிரதேசக்கடலில் முழுமையான கடலாதிக்கத்தை நிலைநாட்டுவதே சிறிலங்கா அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. இதன் காரணமாகவே மீன்பிடிக்கு இறுக்கமான தடைகளை விதித்தது. இந்தத் தடைகளால் தமிழ் மீனவச் சமூகம் தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாக அரசாங்கம் அறிந்திருந்தபோதும், தடைகளைத் தளர்த்த மறுத்து வந்தது.

நான்காவதாக, கிழக்கு மாவட்டங்களில் ஆயுதம் தரித்த எமது போராளிகள் சுதந்திரமாக நடமாடுவதை இராணுவத் தலைமைப்பீடம் விரும்பவில்லை. இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துவைக்குமாறு திரும்பத் திரும்ப நாம் விடுத்த வேண்டுகோளைப் பரிசீலனை செய்யவும் கூட அரசாங்கம் தயாராக இல்லை. இந்தச் சிக்கலான பிரச்சினைக்கு இணக்கப்பாடு காணப்படுமென அரசு தரப்புப் பிரதிநிதிகள் வாக்குறுதி வழங்கியமையின் அடிப்படையிலேயே நாம் பகை நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டோம். ஆனால், பின்பு இந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்கே அரசாங்கம் மறுப்புத் தெரிவித்தது. கிழக்கு மாவட்டங்களில், பகைநிறுத்த உடன்பாட்டுக்கு முன்னராக, எமது போராளிகள் நடமாடும் கெரில்லா அணிகளாக செயற்பட்டு வந்தனர். பகை நிறுத்த உடன்பாட்டில் கிழக்கின் கள நிலைவரங்கள் குறித்து எவ்விதமான மோதல் தவிர்ப்பு விதிகளும் இல்லாத காரணத்தால், எமது போராளிகளின் நடமாட்டம் சிக்கலுக்கு உள்ளாகியது. மோதல்கள் எழக்கூடிய ஆபத்தான சூழ்நிலை எழுந்தும் அரசாங்கம் இப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முனையவில்லை. சிங்கள இராணுவத்தலைமை வேண்டுமென்றே ஒரு நெருக்கடி நிலையைக் கிழக்கில் நீடிக்கச் செய்ததுடன், விடுதலைப் புலிகள் போர் நிறுத்த உடன்பாட்டை மீறுகின்றனர் எனவும் தொடர்ந்து குற்றம் சுமத்தி வந்தது.

> *கடற் புலிகளின் நடமாட்டத்தை முற்றாக முடக்கி, வடக்குக் கிழக்குப் பிரதேசக் கடலில் முழுமையான கடல் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதே சிறிலங்கா அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. இதன் காரணமாகவே மீன்பிடிக்கு இறுக்கமான தடைகளை விதித்தது. இந்தத் தடைகளால் தமிழ் மீனவச் சமூகம் தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாக அரசாங்கம் அறிந்திருந்தபோதும், தடைகளைத் தளர்த்த மறுத்து வந்தது*

ஐந்தாவதாக, பூநகரி இராணுவ முகாமை அகற்றி, வன்னிக்கு தரைப் பாதை திறப்பதை அரசாங்கம் வன்மையாக எதிர்த்து வந்தது. ஒரு குறிப்பிட்ட இராணுவக் கேந்திர நோக்கத்துக்காகவே பூநகரிப் படை முகாமை அகற்ற அரசாங்கம் மறுத்து வருகிறது என்பது எமக்குப் புலனாகியது. யாழ்ப்பாணம் மீது படை எடுப்பதற்கு, யாழ். குடாநாட்டைச் சுற்றி வளைத்து முற்றுகையிடும் நோக்குடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 1992 ஆம் ஆண்டில் பூநகரியில் இந்த இராணுவ முகாமை நிறுவியது என்பது எமக்குத் தெரியும். பின்பு, கிழக்கு மாகாணத்தை முழுமையாகத் தனது இராணுவ ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் படை நடவடிக்கைகளில் அரசாங்கம் கவனம் செலுத்தியதால், யாழ். குடாநாடு மீதான படையெடுப்புத் திட்டம் பிற்போடப்பட்டது. ஆயினும், சந்திரிகாவின் அரசு, ஐக்கிய தேசியக் கட்சி கைவிட்ட யாழ்ப்பாணப் படையெடுப்புத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தத் துணியலாமென நாம் அஞ்சினோம். பூநகரி முகாமை அகற்ற முடியாதென அரசாங்கம் அடம்பிடித்து நின்றமை எமது சந்தேகத்தையும் அச்சத்தையும் மேலும் வலுப்படுத்தியது. இறுதியாக, விடுதலைப் புலிகளுக்கு அங்கலாய்ப்பை ஏற்படுத்திய முக்கிய விடயம் என்னவென்றால், சந்திரிகா அரசின் இராணுவ விரிவாக்கத் திட்டமாகும். சமாதானப் பேச்சு என்ற போலித் திரைக்குப் பின்னால், அரச படைகளை நவீனமயப்படுத்திப் பலப்படுத்தும் பெரும் விரிவாக்கத் திட்டம் ஒன்றை அரசு செயற்படுத்தி வந்தது. பேச்சுகள் நடைபெற்ற காலத்தில் புதிய ஆயுதத் தளபாடங்களை அரசு வாங்கிக் குவித்தது. 'சூப்பர் சோனிக்' போர் விமானங்கள், போருக்கான உலங்குவானூர்திகள், போர்க் கப்பல்கள், நவீன டாங்கிகள், கவசவாகனங்கள், கனரகப் பீரங்கிகள் ஆகியனவற்றை வெளிநாடுகளிலிருந்து அரசு வாங்கியது. இது ஒருபுறமிருக்க, ஆயுதப் படைகளுக்குப் பல ஆயிரக் கணக்கில் இளைஞர்கள் திரட்டப்பட்டுப் பயிற்றுவிக்கப்பட்டனர். இப்படியாக, ஒருபுறம் சமாதானப் பேச்சுகள் என்ற ஒரு போலி அரசியல் நாடகத்தை அரங்கேற்றி உலகத்தை ஏமாற்றிக் கொண்டு, மறுபுறம் போர் ஆயத்த வேலைகளில் ஈடுபட்டது சந்திரிகா அரசு. அத்துடன், பேச்சுகளின் போதும் விடுதலைப் புலிகளது நியாயமான, யதார்த்தமான கோரிக்கைகளை நிராகரித்து இறுக்கமான கடும்போக்கை அரசாங்கம் கடைப்பிடித்து வந்ததும் எமது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது. சந்திரிகாவின் அரசு நேர்மையுடன் நடந்து கொள்ளவில்லை என்றும் யாழ்ப்பாணக் குடாநாடு மீது பெரும் படையெடுப்பை மேற்கொள்ளும் நோக்குடன், பேச்சுகள் என்ற சாக்கில் காலத்தை இழுத்தடித்துப் போருக்கான தயாரிப்பு வேலைகளிலேயே ஈடுபட்டு வருவதாகவும் பிரபாகரன் முழுமையாக நம்பினார். அவரைப் பொறுத்தவரை, இந்தச் சமாதானப் பேச்சுகள் சிங்கள அரசாங்கத்தின் ஏமாற்று வித்தையாகவே இருந்தன.

## விடுதலைப் புலிகள் விடுத்த காலக்கெடு

அன்றைய வரலாற்றுச் சூழ்நிலையின் சகல பரிமாணங்களையும் மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்து பார்த்த பின்பு, அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளும் பொருட்டு ஒரு காலக்கெடுவை விதிக்கப் புலிகளின் தலைமை முடிவெடுத்தது. விடுதலைப் புலிகள் அடைந்துள்ள விரக்தியையும் ஏமாற்றத்தையும் சந்திரிகா அம்மையாருக்கு எடுத்து விளக்கிய பிரபாகரன், ஒரு காலக்கெடுவை விதித்து, அந்தக் கால இடைவெளிக்குள் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாது போனால் பேச்சுக்களை இடைநிறுத்தும் 'வேதனைக்குரிய முடிவை' விடுதலைப் புலிகள் எடுப்பார்கள் என எச்சரித்தார். இந்த விடயம் தொடர்பாகப் பிரபாகரன் சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்றையும் எழுதினார்.

(தொடரும்...)

## 'நுளம்புகள் அற்ற கிராமம்'

# பளை முல்லையடி மக்களது முன்மாதிரிச் செயற்றிட்டம்!





கிளிநொச்சி, ஏப்.08

பளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள முல்லையடி கிராம மக்கள் தமது கிராமத்தில் 'நுளம்புகள் அற்ற கிராமம்'என்ற முன்னுதாரணமரன செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

இந்தச் செயற்றிட்டத்தின் மூலம் கிராம மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தத்தமது வீடுகள் மற்றும் அயல் பகுதிகளை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் தமது கிராமத்தை நுளம்புகள் அற்ற கிராமமாக மாற்றவுள்ளனர்.

முல்லையடியில் தத்தமது வீட்டையும் சுற்றுப் புறத்தையும் வாரம் ஒரு முறை நுளம்புகள் வளரக் கூடிய இடங்கள் உள்ளனவா எனப் பரிசோதித்து பதிவு செய்துகொள்ளும் நடைமுறையும், மாதம் ஒரு முறை அனைத்து வீடுகளின் பதிவுகளையும் கிராம மக்களே ஒன்று கூடிக் கணிப்பிடும் நடவடிக்கையும் இடம் பெறவுள்ளன.

முல்லையடிக் கிராம மக்களது எண்ணக் கருவில் உருவான இந்தச் செயற்றிட்டத்துக்கான தொழில் நுட்ப ஆலோசனைகளை பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், பரி சோதனை அட்டைகள் மற்றும் காகிதாதிகள் என்பவற்றுக்குத் தேவையான அனுசரணைகளைக் கிளிநொச்சி றோட்டறிக் கழகமும் வழங்குகின்றன.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி மையத்தில் இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிராம மக்கள், பிராந்திய மலேரியா தடை இயக்கத்தின் பொறுப்பதிகாரியும் பதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான வைத்தியகலாநிதி மா. ஜெயராசா, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பணியாளர்கள் மற்றும் கிளிநொச்சி றோட்டரிக் கழகத்தினர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.(ஐ-70)

# சிறுபான்மையினரின் கலாசாரம் சிறப்பானது



## அதைச் சீரழிக்கும் அபிவிருத்தி ஏதும் எமக்கு வேண்டாம்

கொழும்பு, ஏப்.08

சிறுபான்மை இனமாகிய தமிழ், முஸ்லிம் மக்களின் கலாச்சாரம் சிறப்பானது. தனித்துவமானது அவர்களின் சமூக, கலாசார விழுமியங்களைச் சீரழிக்கும் எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தையும் எங்களால் அங்கீகரிக்க முடியாது. வேலை வாய்ப்பு என்று கூறிக் கொண்டு, எமது சமூகம் அழியக் கூடிய வகையிலான மறைமுக நிகழ்ச்சி நிரல்களை நாம் அனுமதிக்க மாட்டோம்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

முப்பது வருடகாலமாக நிலவிய யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட சிறுபான்மையின மக்களின் வாழ்வாதாரத்தை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மதுபானத் தொழிற்சாலைகளை நிறுவி, அவற்றின் மூலம் வேலை வாய்ப்பை வழங்குவதன் மூலம் மேம்படுத்த முடியாது.

கடந்த 30 வருடகாலத்தில் பொருளாதாரமும் வாழ்வாதாரமும் அளிக்கப்பட்ட சிறுபான்மையினரை மேம்படுத்துவதில் அக்கறை காட்டாது, மதுபான உற்பத்தித் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது இன்னமும் சிறுபான்மையினரை அழிக்க வேண்டும் என்ற மறைமுக நிகழ்ச்சிநிரல் செயற்பாட்டிலுள்ளது என்பதைக் காட்டுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் போதைப் பொருள் வலயமாக மாற்றிக்கொண்டு, அந்த மக்களின் வாழ்க்கையையும் கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் சீரழிக்க மறைமுக நிகழ்ச்சி நிரல் உள்ளது.

அதன் ஒரு கட்டமாகவே அந்த மாகாணங்களில் மதுபானத் தொழிற்சாலைகள், மதுபான சாலைகள், நிரம்பி வழிகின்றன. கஞ்சா விற்பனை இடம்பெறுகிறது.

உல்லாசப் பொழுதுபோக்குக்காக பாசிக்குடாவில் அமைக்கப்பட்டுள்ள உல்லாசப் பயண விடுதிகள் எவையும் சிறுபான்மையினருக்குச் சொந்தமானவையாக இல்லை என்பது ஒரு புறமிருக்க, அவற்றில் வேலைவாய்ப்புகளிலும் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்படுகின்றனர்.

சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ஒரு சிலர் அவற்றில் வேலை வாய்ப்புப் பெற்றிருந்த போதிலும், அவர்களுக்குப் பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்து அவர்களாக வெளியேறச் செய்யும் நடவடிக்கையில் பெரும்பான்மை முதலீட்டாளர்கள் செயறபடுகின்றனர். அந்த வெற்றிடங்களை பெரும்பான்மையினரைக் கொண்டுவந்து நிரப்புகின்றனர்.

உற்பத்தித் தொழிற்சாலைகள், தொழிறதுறை வலயங்கள் அமைந்துள்ள அவ்வப் பிரதேசங்களைச் சேர்ந்த 60 வீதமானவர்கள் வேலை வாய்ப்புப் பெற வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என்ற நியதியைப் புறந்தள்ளி, பெரும்பான்மையினருக்கு வேலை வாய்ப்பை வழங்கும் இடங்களாக தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மாற்றப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் கைவிடப்பட்டுள்ளதொழிற் சாலைகளை ஏன் மீளத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்க முடியாது.- என்றுள்ளது. (ஐ)

# இரணைமடுக்குளத்தின் கீழ் 900 ஏக்கரில் சிறுபோகம்






கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்தின் கீழ் 900 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த வருடம் குளத்து நீர் பத்தடியில் காணப்படுவதால் குளத்தின் நீரின் அளவைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி மருதநகர் பகுதியை அண்மித்த பகுதிகளில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடும் நிகழ்வு, இரணைமடு திட்ட முகாமைத்துவ அலுவலகத்தில் இரணைமடுத் திட்டப்பணிப்பளரும் பிரதி நீர்ப்பாசனபணிப்பாளருமான பொறியியலாளர் நவரத்தினம் சுதாகரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, 2017 ஆம் ஆண்டிற்கான இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கைக்கான முன்னோடிக் கூட்டமும் திட்ட முகாமைத்துவ குழுவினுடைய எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தின் முடிவுகள் எதிர்வரும் வாரங்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறஉள்ளசிறுபோகப் பயிர்ச்செய்கைக் கூட்டத்தில் இறுதி முடிவாக நிறைவேற்றப்பட உள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ஐ)

# மன்னிப்புச் சபையின் கிளை இலங்கையில் அமையக் கூடாது

### மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.08


சர்வதேச மன்னிப்புச் சபையின் கிளை இலங்கையில் அமைக்கப்படக்கூடாது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் கிளை ஒன்றைக் கொழும்பில் அமைப்பதற்கு எந்த விருப்பமும் கிடையாது.

இவ்வாறான அலுவலகம் ஒன்று இலங்கைக்குத் தேவையில்லை. நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் இருக்கும் போது எமக்குச் சர்வதேச மன்னிப்புச் சபையின் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய அவசியம் என்ன என நான் அரசிடம் கேள்வி எழுப்புகின்றேன் .- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# நாளை மின் தடை



யாழ்ப்பாணம்,ஏப்.08

நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சில இடங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 6.00 மணி வரையில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.


அதன்படி யாழ். பிரதேசத்தில் நெடுந்தீவு பிரதேசம், கொடிகாமம் கச்சாய் வீதிஆகிய இடங்களில் மின்தடை ஏற்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித் துள்ளார். (இ)

# சுகாதாரப் பிரச்சினைகளுடன் மலேஷியாவில் ஈழ அகதிகள்

மலேஷியாவில் தடுத்து வைக்கப் பட்டுள்ள ஈழ அகதிகள் உள்ளிட்டவர்கள் சுகாதாரப் பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளனர் என்று அந்த நாட்டு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக 2015 தொடக்கம் 2016 வரையான காலப் பகுதியில் 118 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என்று அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இருதய நோய், வைரஸ் தொற்று,சிறு நீரகப் பாதிப்பு, நிமோனியா உள்ளிட்ட நோய்களுக்கு இவர்கள் முகம்கொடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அதிகாரிகளின் புறக்கணிப்பே இந்த நிலைக்கு காரணம் எனவும், இந்தத் துறையில் மறுசீரமைப்பு அவசியம் எனவும் மலேஷியா தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை வழங்கியுள்ளது. (ஐ)



# வண்ணை வைத்தீஸ்வரர் இன்று தேரேறி வருகிறார்!

உலகெலாம் நிறைந்து பரந்து உறைந்து விளங்குகின்ற முழுமுதற் கடவுளான எல்லாம் வல்ல சிவபெருமான் வண்ணையம்பதி தனிலே ''வைத்தீஸ்வரர்'' என்ற திருநாமத்துடன் அடியார்க்கருளும் பெருமானாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார். அந்த அருள்மிகு வைத்தீஸ்வரருக்கு இன்று தேர்த்திருவிழா.

ஸ்ரீமத் வாலாம்பிகை நாயகரான வண்ணை வைத்தீஸ்வரர் இன்று வண்ணத் தேரேறி வருகிறார் எமக்கு வரமருள! இந்த வைத்தீஸ்வரன் கோயில் யாழ். நகரின் மத்தியிலே வானளாவ உயர்ந்த கம்பீரமான இராஜகோபுரத்துடன் காங்கேசன்துறை வீதியிலே காட்சியளிக்கின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் சமயப் பிரசங்கம் செய்த இந்தக் கோயில் செட்டியார் பரம்பரையினரால் பரிபாலிக்கப்படுகின்றது. மூன்று வீதிகளையுடைய இந்தச் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயத்தில் இன்றைய தினம் ஐந்து தேர்கள் உலாவருகின்றன. யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் இந்தப் பஞ்சரதப் பவனி காண இந்த ஆலயத்தை வந்தடைவர்.

யாழ். நகரமே இன்று விழாக் கோலம் பூண்டு காணப்படும். ஆலய வீதி இரு மருங்கும் வாழைகள், கமுகுகள், தென்னோலைகள், செவ்விளநீர், நுங்குக்குலை முதலியனவற்றோடு மகரதோரணங்களும் மாவிலையும் போட்டு அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும் ஐந்து தேர்களும் ஆடி அசைந்து வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.


இல்லங்கள், வர்த்தக, ஸ்தாபனங்களின் வாயில்கள் தோறும் பூரண கும்பம் வைக்கப்பட்டு குத்துவிளக்கு ஏற்றி வரவேற்கும் அழகே தனி.

எம்பெருமான் எழுந்தருளி வருகின்ற அழகு காண்பதற்கு நாம் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்

இறைவன் ஆன்மாக்களுக்காகச் செய்கின்ற பஞ்சகிருத்திய வடிவமே ஆலய மஹோற்சவமாகும். அந்த வகையில் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்பனவற்றுள் இன்றைய தேர்த்திருவிழா அழித்தலைக் குறிப்பதாகும். எமது துன்பங்களையும் துயரங்களையும் பிறவிப்பிணியையும் நோயையும் அழித்தொழிக்கவே எம் பெருமான் இன்று தேரிலே ஆரோகணிக்கின்றார்.

இன்றைய ரதோற்சவ நிகழ்வுகளில் பங்குபற்றி பெருமானின் திருவருள் கிடைக்கப்பெற்று பூவுலகில் சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெற்று வாழ்வாங்கு வாழ அவனருளாலே அவன்தாள் வணங்கி அவனருளையே நாடி நிற்போமாக .

''தெய்வத் தமிழ்ச் சுடர்''
**இராசையா ஸ்ரீதரன்**



# கோடேறிச் சாட்சி சொன்ன ஐயனார் இன்று தேரேறி காட்சி தருகிறார்

சுன்னாகம் ஐயனார் ஆலயம் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்னர் வயல்கள் நிறைந்த மருத நிழல் சூழலில் மருத மரமும், தாழை மரமும் தலவிருட்சங்களாகக் கொண்டு அமையப் பெற்றது.

வயலில் உழுது கொண்டிருந்த ''கன்னிப் பெரியார்'' என்னும் திருமணமாகாத பெண்மணியின் கால்களில் பூரணைபுஷ்கலை சமேத ஐயனார் திருவுருவம் தட்டுப்பட்டதாகவும் அதைத் தமது வயலிலே அமைத்து பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்ததாகவும் அதுவே புகழ் பெற்ற சுன்னாகம் ஐயனார் ஆலயம் என்றும் வரலாறு கூறுகின்றது.

ஐயனார் ஆலயத்துக்கு வலது புறமாக பிள்ளையாருக்கும் பெரும் ஆலயம் அமைந்துள்ளமை மற்றொரு கோயில்களுக்கும் இல்லாத தனிச் சிறப்பாகும்.

ஐயனாரின் அடியார் ஒருவரை ஒரு கொடியவன் அடித்துக் கொலை செய்த பின் வயலில் குழிதோண்டிப் புதைத்துவிட்டான். இதுசம்பந்தமான வழக்கு நடுவர் மன்றத்தில் விசாரணைக்கு வந்த போது எதிரிதான் கொலை செய்து அடியாரைக் குழி தோண்டிப் புதைத்தான் என்பதற்கு கண்கண்ட சாட்சி யாரும் உண்டா? என நீதியாளர் வினவியபோது ''ஆம் நான் தான் கண்கண்ட சாட்சி'' என்று ஒரு பெரியவர் சாட்சிக் கூண்டில் ஏறினார்.

தன்னால் புதைக்கப்பட்ட இடத்தைக் காட்ட முடியும் என்று தெரிவித்ததோடு நீதியாளரையும் அழைத்துச் சென்று வயலிலே புதைக்கப்பட்ட அந்த இடத்தைக் காட்டினார். அப்போது எல்லோரும் ஆச்சரியமாக அந்த வயோதிபர் யார் என்று தமக்குள் வினா எழுப்பிக் கொண்டிருந்த வேளையில் பெரியவர் காட்டிய இடத்தைத் தோண்டிய போது சடலம் தென்பட்டது.

நீதியாளருக்கு மாத்திரமா ஆச்சரியம்? அங்கு நின்ற அனைவரும் ஆச்சரியத்தில் தோய்ந்தனர். மூடி மறைக்கப்பட்ட உண்மையை இந்த வயதானவர் எவ்வளவு துல்லியமாக அந்த இடத்தைக் காட்டியது மாத்திரமல்லாமல் புதைக்கப்பட்ட சடலத்தையும் வெளிக் கொண்டு வந்தமையைக் குறித்து எல்லோரதும் கவனம் வயதானவர் பக்கம் திரும்பியது.

நீதியாளர் திரும்பிப் பார்த்து வயோதிபரிடம் ஏதோ வினவ முயன்ற போது வயோதிபர் மாயமாக மறைந்திருந்தமை எல்லோருக்கும் வியப்பைத் தந்தது. ஐயனாரே தன் அடியானுக்காக கோடேறிச்சாட்சி சொன்ன சம்பவம் எங்கும் காட்டுத்தீ போலப் பரவியது. ஐயனாரின் புகழும் பரவியது.

அன்று கோடேறிச் சாட்சி சொன்ன ஐயனார் இன்று தேரேறி வரும் காட்சி காணப் பல்லாயிரக் கணக்கில் பக்தர்கள் கூடுவர். சுன்னாகம் நகரம் முழுவதும் பக்திப் பரவசமுடன் பக்தர்கள் தேவாரம் பாடிய வண்ணமும் கையில் அர்ச்சனைத் தட்டுக்களை ஏந்திய வண்ணமும் ஐயனார் வீதிவலம் வருவார்.

வழி எங்கும் மாலைத் தோரணங்களும், வாழை மரங்களும் கட்டப்பட்டு பக்தர்களுக்கு தாக சாந்தி நிலையங்கள் அமைத்தும், துலாக்காவடி, தூக்குக்காவடிகள் எடுத்தும் பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களைத் தீர்ப்பர். துன்பத்தில் துவண்டுள்ள தமிழர் தம் வாழ்வு வளம் பெறவும், துயரங்கள் நீங்கி இன்பங்கள் வளரவும், நிலையான சமாதானம் வேண்டியும், அமைதியுடனான சுபீட்சம் நிறைந்த வாழ்வு மலரவும் ஐயனாரின் திருப்பாதங்களில் மலர் தூவி பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் வேண்டுதலை நிறைவு செய்ய ஐயனார் அருள் புரிவார்.

**சபா. புஷ்பநாதன்**

காலைக்கதிர்



## கீழைத்தேயக் கல்விக் கல்லூரியை வினைத்திறனாக்கக் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஏப்.08

கீழைத்தேயக் கல்விக் கல்லூரியின் செயற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று அண்மையில், புதிய செம்மணி வீதியிலுள்ள மேற்படிக் கல்லூரியில் நடைபெற்றது. வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சார்பில் கலந்துகொண்ட நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எவ்.எக்ஸ்.அன்ரன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் போது, ஆசிரியர்களுக்கான புலமைசார் பட்டயக் கல்விநெறி, க.பொ.த.சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்குகள், பயிற்சி நெறிகளை நடத்தி சான்றிதழ் வழங்குதல், பிரவேச, பால, பண்டித வகுப்புக்களை நடத்துதல் போன்ற விடயங்கள் முக்கியமாக ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், சைவப்புலவர் சு.செல்லத்துரை மேலும் பலர் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வழங்கினர். (ம)

# முள்ளிக்குள மக்களின் வீடுகளில் கடற்படையினரின் குடும்பங்கள்!



மன்னார், ஏப். 08

மன்னார் முள்ளிக்குளம் கிராமத்தில் பூர்வீகமாக வாழ்ந்த தம்மை வலுகட்டாயமாக வெளியேற்றிவிட்டு இலங்கைக் கடற் படையினர் தமது குடும்பங்களை அங்கு குடியமர்த்தியுள்ளனர் என முள்ளிக்குளம் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

முள்ளிக்குளம்கிராமத்தில் இருந்து தாம் வெளியேற்றப்பட்டபோது 130 வீடுகள் காணப்பட்ட நிலையில், தற்போது 30 வீடுகள் மாத்திரமே எஞ்சியுள்ளன எனவும் அந்த வீடுகளில் கடற்படையினரின் குடும்பங்கள் வாழ்கின்றன எனவும் அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது நிலங்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி முள்ளிக்குளம் கிராம மக்கள் இரவு, பகலாக தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையிலே, வீட்டின் உரிமையாளர்களான தாம் காடுகளில் வாழ, கடற்படையினரின் குடும்பங்கள் எவ்வாறு தமது வீடுகளில் வசிக்க முடியும் என முள்ளிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த எஸ்.கமலாவாஸ் என்ற தாய் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமது கிராமத்தில் மீண்டும் குடியேற வேண்டும் என்ற ஆதங்கத்தில் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்ததாகத் தெரிவித்துள்ள அவர், தமது இடங்களை மீட்ட பின்னரே போராட்டக் களத்திலிருந்து வெளியேறுவோம் எனவும் கூறினர்.

## முகத்தை முழுமையாக மூடும் தலைக்கவச பிரச்சினைக்கு தீர்வு



கொழும்பு, ஏப்.08


முகத்தை முழுமையாக மூடும் தலைக்கவசம் தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு உறுதியளித்துள்ளதாகஅனைத்து இலங்கை மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

சட்டம்மற்றும்ஒழுங்கு அமைச்சர்சாகல ரத்நாயக்கவுடன்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சின் போது இந்த உறுதி மொழி வழங்கப்பட்டதாக சங்கத்தின் செயலாளர் சிரந்த அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தரம், பாதுகாப்புமற்றும் நாட்டின் தற்போதைய சட்ட நடைமுறைகளைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய, எதிர் வரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டின் பின்னர் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைப் பெற்றுத்தர அமைச்சர் சாகல ரத் நாயக்க இணங்கியுள்ளார்என்றும்அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## கட்டுநாயக்கா வழமைக்கு!



கடந்த சில மாதங்களாகத் திருத்த வேலை களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயங்கிவந்த கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையமும் அதன் ஓடு பாதைகளும் முழு அளவில் திருத்த வேலைகள் முடிவடைந்தமையை அடுத்து நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.

அதனையடுத்து அங்கு சேவை வழமைக்குத் திரும்பியிருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ)

## அக்கரப்பத்தனை நீர்த்தாங்கியில் சிறுத்தைக்குட்டி உயிருடன் மீட்பு!

நுவரெலியா, ஏப்.08

நுவரெலியா, அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அக்கரப்பத்தனை கிரேன்லி கீழ்பிரிவு தோட்டத்திலுள்ள நீர் தாங் கியில் உயிருடன் சிறுத்தைக் குட்டியொன்று நேற்றுமுன்தினம் காலை மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் சிறுத்தைக் குட்டி நீர் தாங்கியில் இருப்பதைக் கண்டுள்ளனர். இதனையடுத்து, சிறுவர்கள் பொது மக்களிடம் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து பொது மக்கள் உடனடியாக மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும், அக்கரப்பத்தனை பொலிஸாருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வருகைதந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும், பொலிஸாரும் அந்த சிறுத்தைக் குட்டியை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சிறுத்தை குட்டியை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பொறுப் பேற்றுக் கொண்டனர் என்று அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.



அண்மைக் காலமாக மக்கள் நடமாடும் பகுதிகளில் சிறுத்தைகள் நடமாடி வருகின்றன என்று தெரிவித்திருந்த நிலையில் அந்தச் சிறுத்தைக் குட்டி மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## கிளி.பிரதேச செயலகங்களுக்கு நீர்த்தாங்கி உழவு இயந்திரங்கள்



கிளிநொச்சி, ஏப். 08

வறட்சிக்கால அனர்த்தங்களை எதிர்கொள்ளும் பொருட்டு ஜனாதிபதி செயலகத்தினால் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு கையளிக்கப்பட்ட நீர்தாங்கி உழவுஇயந்திரங்கள்நான்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நான்கும் கரைச்சி, கண்டாவளை பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலகங்களுக்கும் கையளிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் வைத்து மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நான்கு பிரதேச செயலாளர்களிடம் கையளித்துள்ளார். இதன் போது மேலதிக அரச அதிபர் சி. சத்தியசீலன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ஆகியோரும் உடனிருந்தனர். (ம-70)

## ஹற்றனில் லொறி விபத்து:சாரதி காயம்

மொரட்டுவையிலிருந்து அம்பேவெல பகுதிக்கு ஹைலண்ட் பால்மா வெற்றுப் பைக்கற்றுகளைக் கொண்டு சென்ற லொறி ஒன்று ஹற்றன், மல்லிஅப்பு பிரதேசத்தில் நேற்று அதிகாலை 3 மணியளவில் விபத்துக்குள்ளாகியதாக போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த லொறியில் சாரதியும், உதவியாளரும் மாத்திரம் பயணித்துள்ளனர். சாரதி காயங்களுக்குள்ளாகி டிக்கோயா மாவட்டவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுசிகிச்சை பெற்று வருகின்றார்.

சாரதிக்கு ஏற்பட்ட தூக்கமே இந்த விபத்துக்குக் காரணம் என்று ஆரம்பக்கட்டவிசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (எ)

# பதவியிலிருந்து நீக்கப்படுவார் கபீர்

## ஐ.தே.காவின் 'இராஜதந்திரம்' என்கிறார் அஸ்வர்

கொழும்பு, ஏப்.08

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து அமைச்சர் கபீர் ஹாசிமை அகற்றமுற்படுவது ஐ.தே.க.வின் வழமையான 'இராஜதந்திரம்' என்று முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலாளர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

பொரளை என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் நேற்று கூட்டு எதிர்க்கட்சி சார்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டு முஸ்லிம்கள் ஐ.தே.கட்சியின் நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது கபீர் ஹாசிமுக்கு ஐ.தே.கட்சியின் செயலாளர் ஆசனத்தை வழங்கிவிட்டு அந்த ஆசனத்தின் கால்களைப் பறிப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

இது ஐ.தே. கட்சியில் பாரம்பரியமாக இருந்து வருகின்ற ஒரு சேஷ்டை. இதனை முஸ்லிம்கள் நன்கு அறிய வேண்டும். காலம் காலமாக ஐ.தே. கட்சி தேர்தலில் முஸ்லிம்களைப் பயன்படுத்தி விட்டு பின்னர் காலை வாரிவிடும் வழக்கத்தைக் கொண்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளுக்காக பிரதமருக்கு துணையாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இருக்கின்றார். ஆகவே அவர்கள் மீது முஸ்லிம்கள் இன்னும் நம்பிக்கை வைப்பது தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் செயலாகும்.-என்றார். (எ)

## அமெ.ஏவுகணைத்தாக்குதல் தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டத்தை தடுக்காது

### சிரிய ஹோம்ஸ் மாகாண ஆளுநர் கூறுகிறார்


அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதல்கள் தீவிரவாதத்துக்கு எதிரான சிரிய அரசின் போராட்டத்தை தடுக்காது என்று சிரியாவின் ஹோம்ஸ் மாகாண ஆளுநர்தலால் பராசி தெரிவித்துள்ளார்.

சிரிய தொலைகாட்சி ஒன்றுக்கு நேற்று தொலைபேசி ஊடாகக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன் போது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் தீவிரவாதத்துக்கு ஆதரவளிக்கின்றமை தமக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் இந்த பதில் தாக்குதலை சவூதி, இஸ்ரேல், ஆஸ்திரேலிய ஆகிய நாடுகள் வரவேற்றுள்ள நிலையிலேயே ஹோம்ஸ் மாகாண ஆளுநர் தலால் பராசி மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார். (எ)

# சிரியா மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்

## இரசாயன வாயு வீச்சுக்குப் பதிலடி



சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் இடம் பெற்ற இரசாயனவாயுத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்கா, சிரியாவின் விமானத் தளம் ஒன்றின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது.

கிழக்கு மத்திய தரைக் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள அமெரிக்க போர்க் கப்பல்களான யு.எஸ்.எஸ்.ரோஸ் மற்றும் யு.எஸ்.எஸ்.போர்ட்டர் என்பனவே மாறி மாறி இந்த ஐம்பத்தொன்பது ஏவுகணைகளையும்சிரியபடையினர் மீது வீசியுள்ளன. இரசாயனத் தாக்குதலை நடத்தியதாகக் கருதப்படும் ஷாரத் விமானத் தளத்தின் மீதே ஏவுகணைகள் வீசப் பட்டுள்ளன என்று பென்டகன் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதலில் விமானப்படைத்தளம், போர் விமானங்கள் மற்றும் அங்கிருந்த பெற்றோல் பங்க் உள்ளிட்டவை தீக்கிரையான. அங்கிருந்த ஏராள மான வீரர்களும் கொல்லப் பட்டனர்.

சிரியாவின் அப்பாவிப் பொதுமக்கள் மீது இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டமையைக் கண்டிக்கும் முகமாகவே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தவை வருமாறு:-

இரசாயனத் தாக்குதலையடுத்து சிரியா மீதான அமெரிக்காவின் கவனம்அதிகரித்துள்ளது. சிரியாவின்தேசியப் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டே இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டது. மேலும், சிரியாவில் இடம் பெற்று வரும் மனிதப் படுகொலைகளை உலக நாடுகள் அனைத்தும் ஒரணியில் திரண்டு தடுக்க வேண்டும் என்றும் பயங்கரவாதம் எந்த ரூபத்தில் வந்தாலும் அதை ஒடுக்க வேண்டும்.-என்றார்.

கடந்து ஆறு ஆண்டுகளில், சிரிய அரச படைகள்மீது அமெரிக்கா நடத்தியிருக்கும் முதலாவது நேரடித் தாக்குதல் இது.

இதேவேளை, சிரியாவில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற இரசாயன வாயுத்தாக்குதலில் 20 குழந்தைகள் உட்பட 72 பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டிருந்த டொனால்ட்ட்ரம்ப், பஷர் அல்-அசாத் ஆட்சியின் கொடிய செயல்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய தருணம் வந்துள்ளது என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மியன்மாரில் முஸ்லிம் இனச் சுத்திகரிப்பா? மறுக்கின்றார் அந்நாட்டின் தலைவர் சூகி



மியன்மாரில் இனச் சிறுபான்மையினராக வாழும் ரோஹின்ஜயா இன முஸ்லிம்கள் இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்டுள்ளனர் என முன் வைக்கப் படும் குற்றச்சாட்டை அந்த நாட்டுத் தலைவர் ஆங் சான் சூகி நிராகரித்துள்ளார்.

ரோஹின்ஜயா இன முஸ்லிம்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் இடம் பெற்று வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில் அவரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

ரோஹின்ஜயா இன முஸ்லிம்கள் அதிகளவில் வாழும் ரஹைய்ன் மாநிலத்தில் பிரச்சினைகள் இருக்கின்றமையை ஆங்சான் சூகி ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனினும், இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டதாகக் கூறப்படுவது மிகவும் கடுமையான வார்த்தைப் பிரயோகம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு திரும்ப எதிர்பார்த்துள்ள ரோஹின்ஜயா இன முஸ்லிம் மக்களைத் தமது நாடு வரவேற்கும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ரோஹின்ஜயா இன முஸ்லிம்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கு மியன் மார் அரசு தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

ரோஹின்ஜய இன முஸ்லிம்கள் பங்களாதேஷில் இருந்து சட்டவிரோதமாக வந்து, தமது நாட்டில் குடியேறினர் என்று மியன்மார் அரசு கூறிவருகின்றது.

ரோஜின்ஜயா இனமுஸ்லிம்கள் அதிகாரிகளாலும் வெளிப்படையாகவும் பாரபட்சத்தை எதிர்நோக்கிவருகின்றனர் என்று சர்வதேசத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (எ)

# ரஷ்யா கண்டனம்

சிரிய விமானப்படைத் தளத்தின் மீது ஏவுகணைகளை வீசித்தாக்குதல் நடத்திய அமெரிக்காவின் நடவடிக்கைக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் புடினின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்லோவ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இறையாண்மை கொண்ட ஒரு நாட்டின்மீது அமெரிக்கா நடத்தியுள்ள ஏவுகணை வீச்சால் அமெரிக்கா-ரஷ்யா இடையிலான நல்லுறவுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சிரிய அரசிடம் இரசாயன ஆயுதங்கள் எவையும் இல்லை. சிரிய மீது தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் அங்கு அரசுப் படைகள்இரசாயனத்தாக்குதல் நடத்தின என அமெரிக்கா புனை கதைகளைக் கூறி குற்றம்சாட்டி வருகின்றது. -என்றுள்ளது. (எ)

# அமெரிக்க ஏவுகணைத் தாக்குதல்: ஆதரவளிக்கிறது ஆஸ்திரேலியா

சிரிய விமானத்தளம் மீதான அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதல்களுக்கு ஆஸ்திரேலிய பிரதமர் மல்க்கம் டர்ன்புல் ஆதரவு தெரிவித்துள்ளார்.

சிட்னியில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பின்போது மல்க்கம் டர்ன்புல் தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.


இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமெரிக்காவின் துரித மான பதிலடிக்கு ஆஸ்திரேலிய அரசுபலமான ஆதரவை வெளிப்படுத்துகின்றது. அமெரிக்காவின் இந்தத் தாக்குதல் சம்பவம் அசாத் ஆட்சிக்கு ஒரு வலுவான செய்தியை அனுப்பியுள்ளது.



இந்தத்தாக்குதலில் ஆஸ்திரேலியா தொடர்புபடவில்லை. எனினும், ஈராக் மற்றும் சிரியாவில் இடம்பெறும் இராணுவநடவடிக்கைகளில் முழு உறுதிப்பாட்டுடன் ஆஸ்திரேலியா தொடர்ந்தும் பங்களிக்கும்.-என்றார். (எ)

# நவீன ஏவுகணை பாதுகாப்பை இந்தியாவுக்கு வழங்கும் ஒப்பந்தத்தில் இஸ்ரேல் கைச்சாத்து



நவீன ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை இந்தியாவுக்குவழங்கும் உடன் படிக்கை ஒன்றில் இஸ்ரேல் கையெழுத்திட்டுள்ளதாக இஸ்ரேல் விண்வெளி தொழிலகம் அறிவித்துள்ளது.

இதன் பெறுமதி சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பெரியளவிலான இந்த உடன்படிக்கையின் நடுத்தர தூரத்தை குறி வைத்துத் தாக்கும் நவீன ஏவுகணை அமைப்புக்கான தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்கள் இந்தியாவுக்கு வழங்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசுடன் இஸ்ரேல் கொண்டுள்ள நம்பிக்கையை இந்த உடன்படிக்கை வெளிப் படுத்துவதாக, இஸ்ரேல் விண்வெளி தொழிலகத்தின் தலைமை செயல் அதிகாரி ஜோசப் வெஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், மேக் இன் இந்தியா திட்டத்தின் மூலம் தலைசிறந்த பாதுகாப்பு தொழில்நுட்பங்களை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ள ஆர்வமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்தத் திட்டத்தில் லார்சன் மற்றும் டவுப்ரோ ஆகிய இந்திய நிறுவனங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# வீணானது கபுகெதரவின் போராட்டம்; தொடரைச் சமப்படுத்தியது பங்களாதேஷ்!

கொழும்பு, ஏப். 08

பங்களாதேஷ் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபதுக்கு 20 போட்டியில் பந்து வீச்சு, துடுப்பாட்டம் மற்றும் களத்தடுப்பு ஆகிய மூன்று துறைகளிலும் திறம்படச் செயற்பட்ட பங்களாதேஷ் அணி 45 ஓட்டங்களால் இலங்கை அணியை வெற்றிகொண்டது.



இவ்வெற்றி மூலம் இறுதியாக தாம் விளையாடியிருந்த எட்டு இருபதுக்கு 20 போட்டிகளிலும் தோல்வியடைந்திருந்த பங்களாதேஷ் அணி, இவ்வெற்றியால் அனைத்து தோல்விகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளதுடன், டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடர்கள் போன்று 1-1 என இந்த இருபதுக்கு 20 தொடரையும் சமப்படுத்தியுள்ளது.

ஆர். பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமாகியிருந்த இப்போட்டியில், இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் ஓய்வைஅறிவித்திருந்த பங்களாதேஷ் அணியின் தலைவர் மசரபி மொர்தஸா, தனது பிரியாவிடைப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொண்டார்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற போட்டிக்காக பங்களாதேஷ் அணியில் இரண்டு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. முதுகு உபாதைக்கு உள்ளாகியிருந்த பங்களாதேஷ் அணியின் அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தமிம் இக்பாலுக்குப் பதிலாக இம்ருல் கைஸ் அணிக்குள் இணைக்கப்பட்டதுடன், வேகப்பந்து வீச்சாளர் தஸ்கின் அஹமட்டுக்கு பதிலாக இளம் சுழல் பந்துவீச்சாளர் மெஹதி ஹஸன் இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியொன்றில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். இலங்கை அணியில் மாற்றங்கள் ஏதுமின்றி களமிறங்கியிருந்தது.

துடுப்பாட்டத்திற்கு அதிகம் சாதமாயிருந்த ஆடுகளத்தில் இம்ருல் மற்றும் சௌம்யா சர்க்கார் ஜோடி தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

ஆரம்ப வீரர்கள் மெதுவாக போட்டியை தொடங்கியிருப்பினும் அடுத்தடுத்த ஓவர்களில் பவுண்டரி எல்லைகளை பதம் பார்த்தனர்.

அதிதுரித முறையில் 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த பங்களாதேஷ், தமது முதல் விக்கெட்டாக சௌம்யா சர்க்காரை பறிகொடுத்தது. வெறும் 17 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டிருந்த சர்க்கார், 2 சிக்ஸர்கள் மற்றும் 4 பவுண்டரிகள் உடன் 34 ஓட்டங்களைப் பெற்று தமது அணிக்குப் பெறுமதி சேர்த்திருந்தார்.

இலங்கை அணிக்கு மிகவும் தேவையாய் இருந்த இந்த முதல் விக்கெட்டை அசேல குணரத்ன கைப்பற்றியிருந்தார்.

சௌம்யா சர்க்காரின் விக்கெட்டைத் தொடர்ந்து ‘ரன் அவுட்’ முறையில் ஏனைய இடது கை ஆரம்ப வீரர் இம்ருல் கைஸ் 4 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 36 ஓட்டங்களுடன் ஓய்வறை திரும்பினார்.

மத்திய வரிசையில் பங்களாதேஷ் அணியின் சகல துறை ஆட்டக்காரர் சகீப் அல்ஹஸன் 31 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 38 ஓட்டங்களை குவித்து தனது அணியைப் பலப்படுத்தியிருந்தார்.

சிறப்பான ஆட்டத்தால், பங்களாதேஷ் அணியின் ஏனைய வீரர்கள் ஒரு பெரும் இலக்கை பெறுவதற்கு போட்டியின் இறுதிக்கட்டத்தில் முயற்சித்திருந்தனர்.

எனினும், அப்போது போட்டியின் 19 ஆவது ஓவரை வீச கையில் பந்தை ஏந்திக்கொண்ட இலங்கை அணியின் நட்சத்திர வீரர் லசித் மலிங்க தான் வீசிய மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது பந்துகளில் தொடர்ச்சியான முறையில் மூன்று விக்கெட்டுகளை சாய்த்து ஹட்ரிக் சாதனை ஒன்றை பதிவு செய்தார்.

இதனால், முறையே பங்களாதேஷ் வீரர்களில் அதிரடி ஆட்டத்தை வெளிக்காட்டிய முஸ்பிகுர் ரஹீம் 15 ஓட்டங்களுடனும் பிரியாவிடை நாயகன் மசரபி மொர்தஸா மற்றும் மெஹதி ஹஸன் ஆகியோர் ஓட்டம் ஏதுமின்றியும் ஓய்வறை திரும்பியிருந்தனர்.

முடிவில் பங்களாதேஷ் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களை குவித்துக்கொண்டது.

களத்தடுப்பு இப்போட்டியில் சற்று மோசமாக காணப்பட்டிருந்த அதேசமயம் இலங்கை அணியின் பந்து வீச்சில் நான்காவது சர்வதேச ஹட்ரிக் சாதனையை பதிவு செய்திருந்த லசித் மலிங்க 34 ஓட்டங்களுக்கு 3 விக் கெட்டுகளையும், நுவன் குலசேகர, விக்கும் சஞ்சய, அசேல குணரத்ன மற்றும் திசர.பெரேரா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதமும் கைப்பற்றியிருந்தனர்.

இதனையடுத்து சற்று சவாலான வெற்றி இலக்கான 177 ஓட்டங்களை 20 ஓவர்களில் பெறுவதற்கு பதிலுக்கு ஆடியிருந்த இலங்கை அணி முதல் ஓவரின் இரண்டாம் பந்தில், தமது முதல் விக்கெட்டைப் பறிகொடுத்தது.

கடந்த போட்டிக்கு மாறாக இந்த ஆட்டத்தில் தில்ஷான் முனவீர உடன் மைதானம் விரைந்த குசல் பெரேரா தான் எதிர்கொண்ட முதல் பந்தில் பவுண்டரி ஒன்றை விளாசி இரண்டாம் பந்தில் சகீப் அல்ஹஸன் மூலம் ‘போல்ட்’ செய்யப்பட்டார்.

மோசமான ஆரம்பத்தைப் பெற்ற இலங்கை தொடர்ச்சியாக, சகீப் அல்ஹஸன், முஸ்தபிசுர் ரஹ்மான் மற்றும் மஹமதுல்லாஹ் ஆகியோரின் அற்புத பந்து வீச்சுகளில் விக்கெட்டுகளை அடுக்கடுக்காக பறிகொடுத்து, ஒரு கட்டத்தில் 40 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இவ்வாறானதோர் இக்கட்டான நிலையில் ஜோடி சேர்ந்த திசர பெரேரா மற்றும் கபுகெதர ஆகியோர் ஆறாவது விக்கெட்டுக்காக சிறப்பாக ஆடி போட்டியை இலங்கையின் பக்கம் திருப்பி நம்பிக்கையூட்டியிருந்தனர்.

எனினும், மீண்டும் சகீப் அல் ஹஸனின் சாமர்த்தியமான பந்து வீச்சு ஒன்றின் மூலம் ஸ்டம்ப் முறையில் பெரேராவை ஓய்வறை நோக்கி அனுப்பினார்.

27 ஓட்டங்களுடன் ஓய்வறை திரும்பிய பெரேராவைத் தொடர்ந்து ஏனைய இலங்கை அணி வீரர்கள் எவரும் சொல்லிக் கொள்ளுமளவுக்கு எதனையும் செய்திருக்கவில்லை. கபுகெதரவும் இலங்கையின் 8 ஆவது விக்கெட்டாக ஓய்வறை திரும்ப பங்களாதேஷ் அணியின் வெற்றி உறுதியாகியது.

இறுதியில் இலங்கை அணி, 18 ஓவர்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து 131 ஓட்டங்களை மாத்திரமே பெற்று இப்போட்டியில் 45 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் இலங்கை அணியில் இறுதிவரை போராடியிருந்த சாமர கபுகெதர மொத்தமாக, 35 பந்துகளை எதிர்கொண்டு 5 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் உள்ளடங்கலாக 50 ஓட்டங்களைப் பெற்று தனது முதலாவது இருபதுக்கு 20 சர்வதேச அரைச்சதத்தைப் பூர்த்திசெய்தார்.

பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சில், இலங்கைக்கு அதிக நெருக்கடி தந்த முஸ்தபிசுர் ரஹ்மான் வெறும் 21 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுகளையும் சகீப் அல்ஹஸன் மூன்று விக்கெட்டுகளையும் கைப்பற்றி இலங்கை அணியுடனான தமது சுற்றுப்பயணத்தை வெற்றியுடன் நிறைவு செய்தனர். இப் போட்டியின் ஆட்ட நாயகனாக சகீப் அல் ஹஸன் தெரிவு செய்யப்பட்டார். மலிங்க தொடர் நாயகனாகத் தெரிவானார்.

## காதலியுடன் இருந்த புகைப்படத்தை பதிவிட்டு சர்ச்சையில் சிக்கிய இலங்கை வீரர்!

ஐதராபாத், ஏப். 08

இலங்கை கிரிக்கெட் வீரரான ரமித் ரம்புக்வெல்ல தனது காதலியுடன் இணைந்து எடுத்த புகைப்படத்தை பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்திருப்பது புதிய சர்ச்சையை கிளப்பியுள்ளது.









இலங்கை அணியின் கிரிக்கெட் வீரரான ரமித் ரம்புக்வெல்ல அமெரிக்காவில் வசிக்கும் நடாலியா என்ற பெண்ணைக் காதலித்து வருகிறார். பல சர்ச்சைகளிலும் சிக்கினாலும், தற்போது தன் காதலியான நடாலியாவுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை தனது பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்துள்ளார்.

இது சமூகவலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

ரமித் ரம்புக்வெல்ல முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

*மேற்கிந்திய தீவுகள் அணியுடனான ஒருநாள் போட்டி;*

# அழுத்தங்கள், மாற்றங்களுடன் களமிறங்குகிறது பாகிஸ்தான்!



கராச்சி, ஏப். 08

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரை எதிர்கொள்ளும் பாகிஸ்தான் அணியின் தலைமைப் பதவி உட்பட, அணியில் பல அதிரடி மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி, அங்கு நான்கு போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் என்பவற்றில் விளையாடி வருகின்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான இருபதுக்கு 20 தொடரை 3-1 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் அணி கைப்பற்றியுள்ளது. இதன்போது அணியின் புதிய தலைவராக சர்ப்ராஸ் அஹமட் செயற்பட்டிருந்தமை முக்கிய விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் நேற்றைய தினம் ஆரம்பமாகிய இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடருக்கும் சர்ப்ராஸ் அஹமட் தலைமையின் கீழ் பாகிஸ்தான் அணி விளையாடவுள்ள முதல் ஒருநாள் தொடராக இந்த தொடர் அமையவுள்ளமை விசேட அம்சமாகும்.

2019 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவதற்கு பாகிஸ்தான் அணி நேரடியாக தகுதி பெறுவது கேள்விக்குறியாகியுள்ள நிலையிலேயே இந்த ஒருநாள் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இதன் காரணமாக இந்த தொடர் பாகிஸ்தான் அணிக்கு மிக முக்கிய தொடராக காணப்படுகின்றது. எனவே, அவ்வணி வீரர்கள் கடும் அழுத்தங்களுக்கு மத்தியிலேயே விளையாட வேண்டிய நிலையில் உள்ளனர்.

பாகிஸ்தான் உள்ளூர் இருபதுக்கு 20 போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்த கம்ரான் அக்மலுக்கு மிக நீண்ட இடைவேளைக்குப் பின்னர் அணியில் மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தத் தொடரில் சிறப்பான முறையில் செயற்பட்டு அணியில் தனக்கான இடத்தினை தக்கவைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் அவர் களம் இறங்குகிறார்.

அதேபோன்று, உபாதை காரணமாக அண்மைக் காலமாக போட்டிகளில் விளையாடாத பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜுனைட் கான், மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் விளையாடுகிறார்.

பாகிஸ்தான் சுப்பர் லீக் இருபதுக்கு 20 தொடரின் போது, சூதாட்டச் சர்ச்சையில் சிக்கிய ஷர்ஜில் கான், காலித் லத்தீப், மொஹமட் இர்பான், நாசிர் ஜம்ஷெட் மற்றும் ஷாசாயிப் ஹசன் ஆகிய 5 வீரர்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு நிலையில், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள பாகிஸ்தான் அணியினை கடந்த புதன்கிழமை அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.


மிஸ்பா தலைமையில் விளையாடவுள்ள இந்த அணியில் 18 வயதான இளம் வீரர் சதாப் கான் இணைக்கப்பட்டுள்ளார்.

சர்ஜில் கான், சொஹைல் கான், சமி அஸ்லம், ரஹாட் அலி, மொஹம்மட் ரிஸ்வான், மொஹம்மட் நவாஸ், இம்ரான் கான் ஆகியோர் இந்த அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அஹமட் சஷாட், சொகைப் கான், ஷான் மசூட், உஸ்மான் சலாஹுட்டின், ஹசன் அலி, மொஹமட் அப்பாஸ் ஆகிய வீரர்கள் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

டெஸ்ட் போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தி வரும் பாகிஸ்தான் அணி மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரையும் கைப்பற்றும் முனைப்புடன் களம் இறங்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

# ரஹானே, ஸ்மித் அதிரடியால் மும்பையை வீழ்த்தியது புனே!



புனே, ஏப் 08

ஐ.பி.எல் தொடரின் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஆட்டத்தில் ரகானே மற்றும் ஸ்மித் ஆகியோரின் அதிரடி துடுப்பாட்டத்தால் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மும்பை அணியை புனே வீழ்த்தியது.

ஐ.பி.எல். தொடரின் 2 ஆவது நாளான நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரைசிங் புனே சூப்பர்ஜெயன்ட் - மும்பை அணிகள் மோதின.

புனே அணித் தலைவர் ஸ்மித் நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பை தேர்வு செய்தார். புனே அணியில் ஆடம் சம்பா, இம்ரான் தாஹிர் என இரண்டு வெளிநாட்டு 'லெக்ஸ் பின்னர்கள்' சேர்க்கப்பட்டனர்.

இதனால் டு பிளசிஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டார். மும்பை அணியின் பார்த்தீவ் பட்டேல், பட்லர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

இருவரும் தொடக்கம் முதல் அதிரடியாக விளையாடினர்.

மும்பை அணி 4.2 ஓவரில் 45 ஓட்டங்களை எடுத்திருக்கும்போது முதல் விக்கெட்டை இழந்தது. பார்த்தீப் பட்டேல் 14 பந்துகளில் 19 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார். இவரது விக்கெட்டை இம்ரான் தாஹிர் வீழ்த்தினார்.

அடுத்து வந்த ரோகித் சர்மா (3 ஓட்டங்கள்), பட்லர் (19 பந்துகளில் 38 ஓட்டங்கள்) ஆகிய விக்கெட்டையும் தாஹிர் வீழ்த்தினார்.

மும்பை அணியின் கடைசிக் கட்ட அதிரடியால் கடைசி ஓவரில் மட்டும் 30 ஓட்டங்கள் திரட்ட மும்பை அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 184 ஓட்டங்கள் குவித்தது. இதனால் புனே அணிக்கு 185 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

185 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய புனே அணியின் தொடக்க ஆட்டக்காரர் ரஹானே தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடினார்.

34 பந்துகளில் 60 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். அணித் ஸ்மித் சிக்ஸர்களும், பவுண்டரிகளுமாக விளாச அணியின் ஓட்டப் பெறுதி மின்னல் வேகத்தில் உயர்ந்தது.

19 ஓவரின் 5 ஆவது பந்தில் 187 ஓட்டங்களை எடுத்து புனே அணி வெற்றியை எட்டியது. ஸ்மித் 54 பந்துகளுக்கு 84 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

# இந்திய அணியில் மீண்டும் இடம் கிடைத்தமையால் இலகுவாக விளையாட முடிந்தது!

*- யுவராஜ் சிங்*



பெங்களூர், ஏப் 08

இந்திய கிரிக்கெட் அணியில் மீண்டும் இடம் கிடைத்ததைத் தொடர்ந்து இலகுவாக துடுப்பெடுத்தாடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்று யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

10 ஆவது 'இண்டியன் பிறீமியர் லீக்கில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு எதிரான ஆரம்பப் போட்டியில் 62 ஓட்டங்களைக் குவித்து சன்ரைசர்ஸ் ஹைதரா பாத்தின் வெற்றிக்கு பங்களிப்பு செய்த பின்னர் யுவராஜ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த ஐ.பி.எஸ். தொடரின் முதலாவது ஆட்டத்தில் எனது துடுப்பாட்டத்தை நான் பெரிதும் ரசித்தேன். கடந்த இரண்டு வருடங்களாக துடுப்பாட்டத்தில் நான் மேடு, பள்ளங்களை சந்தித்துவந்தேன். ஆனால், இப்போது நான் எனது திறமை குறித்து மகிழ்வுறுகின்றேன்.

இந்திய அணியில் மீண்டும் இடம்கிடைத்தமை எனக்குப் பேருதவியாக அமைந்துள்ளது. நான் இப்போது சுதந்திரமாக விளையாடுவதுடன் இனிமேலும் மீள் வருகை குறித்து கவலைப்படமாட்டேன்.

சந்தர்ப்பத்திற்கேற்ப எனது ஆற்றலை வெளிப்படுத்துவேன்.- என்றும் தெரிவித்துள்ளார்.

யுவராஜ் சிங் இந்தியாவில் நடைபெற்ற 2016 உலக இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளின் பின்னர் இவ் வருடம் ஜனவரியில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான இரு வகை மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் தொடருக்கு மீண்டும் அழைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்



# மாற்றுத்திறனாளிகளில் சர்வதேச சமூகம் அதிக கரிசனையுடன் செயற்படுகின்றது

**நாங்கள் அவ்வாறு இல்லை என்று கணேஸ்வரன் கவலை**

மாற்றுத்திறனாளிகளின் திறமைகளை நாம் வெளியே கொண்டு வரவேண்டும். சர்வதேச சமூகம் மாற்றுத்திறனாளிகளில்காட்டுகின்றஅக்கறையை விடவும் குறைந்தளவான அக்கறையையேநாம்அவர்கள்மேல் காட்டுகின்றோம். எனவே மாற்றுத் திறனாளிகளும் எமது அங்கத்தினர் என்ற வகையில் நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து அவர்களை சரிவர கவனத்தில் கொள்வது அவசியமாகும்என்று கணேஸ்வரன்வேலாயுதம்தெரிவித்தார்.

வடமாராட்சி கல்வி வலயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஓட்டிசம்மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட நிகழ்வு திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் பிரதிக்கல்விப்பணிப்பாளர்ரவீந்திரன்தலைமையில்இடம்பெற்றது.

அந்நிகழ்வில்பிரதம அதிதியாகக்கலந்துகொண்ட சிவன்அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குனர் கணேஸ்வரன் வேலாயுதம் அங்கு தொடர்ந்து பேசுகையில்-

"உலக நாடுகளில் உள்ள மாற்றுத் திறனாளிகள் பெரிய பெரியசாதனைகளுக்கெல்லாம் சொந்தக்காரர்களாக இருக்கின்றார்கள். கண் தெரியாத ஒருவர் வெளிநாடு ஒன்றில் உள்விவகார அமைச்சராகச் செயற்படுகின்றார்.

அதேபோல்அவர்கள்பொதுப் பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முன்னணியில் திகழ்கின்றனர். எம்மோடு இணைந்து சம ரீதியாக பங்காற்றக் கூடிய ஆற்றலும் வல்லமையும் அவர்களுக்கு இருக்கின்றன. அவர்களிடையே காணப்படும்செயற்திறன்களை நாம்கண்டுகொள்ளமுடிகின்றது. சம அங்கீகாரத்தோடு அவர்களை எல்லோரும் நேசிக்கின்றார்கள்.

ஆனால் நாங்கள், ஒரு தனிச் சிறுபான்மையினமாக கருத்துருவாக்கம் செய்யப்பட்ட மனிதர்களாகவே அவர்களைப் பார்க்கின்றோம். வீடுகளில் சிலர் வெட்கத்தில் தம் பிள்ளைகளை அப்படியே மூடி மறைத்து வைத்து விடுகின்றார்கள். உரிய சிகிச்சை வசதிகளின்றியும் பொருளாதார வசதியின்றியும் கணிசமானளவு மாற்றுத் திறனாளிகளின் எதிர்கால நலன்கள் எமது நாட்டில் கேள்விக்குறியாகவேஅமைந்து விடுகின்றன.

நாங்கள் மாற்றுத் திறனாளிகள் பற்றி கூடுதல் கவனம் செலுத்தி அவர்களின் அறிவை அவர்களின் ஆற்றலையும் வெளிக்கொணர்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாக சாதாரண மக்களை நாங்கள் எந்தளவு நேசிக்கின்றோமோ அந்தளவுக்கு மாற்றுத் திறனாளிகளையும் நேசிக்கக்கூடிய பண்புகள் உயரிய அளவில் எல்லோர் மத்தியிலும் கொண்டுவரப்படுதல்வேண்டும்.

இதற்காக எமது சிவன் அறக்கட்டளை நிறுவனம் மாற்றுத் திறனாளிகளின் சமூக மாற்றத்திற்காக பலவித சேவைகளைப் புரிந்து வருகின்றது. இத்தகைய நல்ல நோக்குடன் எமது நிறுவனம் ஆற்றி வருகின்ற பணிகளுக்கு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்எமக்குகிடைத்த வண்ணமேஉள்ளன."-என்றார்.

இந்நிகழ்வில்கோட்டக்கல்வி அதிகாரிகள், ஆசிரியர்ஆலோசகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மாற்றுத்திறனாளிகளின் கலை விழா நிகழ்வும் இங்கு இடம்பெற்றது. (ம)

# சாவகச்சேரியில் படையினரின் புதுவருட விளையாட்டு நிகழ்வு

தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டுதினத்தைமுன்னிட்டு இன்று காலை 8 மணிக்கு சாவகச்சேரி தம்புதோட்டம் 523 ஆவது படை முகாமில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த விளையாட்டு நிகழ்வு, தமிழ் - சிங்கள மக்களுக்கிடையிலான ஐக்கியத்தை மேலும் மேம்படுத்தும்நோக்கில்நடத்தப்படவுள்ளது என படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

கழகங்கள் மற்றும் பொது மக்கள் இந்த விளையாட்டுநிகழ்வுகளில் பங்கேற்க முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-21)

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடதுசாரி அரசியல்வாதி. அவர் போன்றவர்களை நம்பித்தான் ஆட்சி மாற்றத்துக்கு ஆதரவு வழங்கினோம். ஆனால், அவரே இப்படிப் பேசுகின்றார்." - என்று மேலும் குறிப்பிட்டார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய அமைச்சர் ராஜித சேனாரத்ன -

"நான் கூறிய தகவல்களை ஊடகங்கள் தவறாகப் பிரசுரித்துள்ளன. இவரும் தவறாக விளங்கி வைத்துள்ளார். நான் உரையாற்றும்போது மாவை சேனாதிராசா எம்.பி. அங்கிருந்தார். உறுப்பினர்கூறுவதுபோல் நான்எதையும்சொல்லவில்லை.

"எனது நிலைப்பாடு என்னவென்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். 1980ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்தே நான் மக்களுக்காகக்குரல்கொடுத்து வருகின்றேன். உங்களுக்கு (சிவசக்தி ஆனந்தன்) முன்பிருந்தே தமிழ் மக்களுக்காக நான் பேசி வருகின்றேன். எனவே, இனியும் தவறான அர்த்தப்படுத்தலுடன் -தவறான தகவல்களை மேற்கோள் காட்டிப் பேச வேண் டாம் - என்றார். (உ)

## கிடைத்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிணையிலும் ஐந்து லட்சம் ரூபாவுக்கு இருவரின் உறுதிப் பிணையிலும்செல்வதற்கு அவருக்கு கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜயரட்ணா அனுமதிவழங்கினார். எனினும்அவர் நாட்டை விட்டு வெளியேறக் கூடாது எனப் பணித்த நீதிவான் அவரது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில்ஒப்படைக்கவும்உத்தரவிட்டார்.

வீரவன்ஸவின்மகளின்உடல் நிலையைக் கருத்திற் கொண்டு இந்தப் பிணை வழங்கப்படுவதாக நீதிவான் தெரிவித்தார்.

அரசசொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்றகுற்றச்சாட்டின்அடிப்படையில்கடந்தமூன்றுமாதங்களாக வீரவன்ஸ விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

விமல் வீரவன்ஸவுக்குப் பிணை வழங்குமாறு கோரி கூட்டு எதிரணி எம்.பியான தினேஷ் குணவர்த்தன பல முறை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தி இருந்தார் எனக் கூறப்படுகின்றது. (உ)

## நெடுந்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாமி ஜெகதீஸ்வரனுக்கு யாழ். மேல் நீதிமன்றம் மரணதண்டனை வழங்கி நேற்றுத் தீர்ப்பளித்தது.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

குற்றவாளியை 25 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், பத்து லட்சம் ரூபா நஷ்டஈடும் வழங்குமாறும் நீதிபதி தனது தீர்ப்பில் உத்தரவிட்டார்.

நெடுந்தீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யேசுதாஸ் லக்சாயினி என்ற 12 வயதுச் சிறுமியை 2012 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் திகதி நெடுந்தீவில் வைத்து பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய பின்னர் கல்லால் அடித்துக் கொலை செய்தார்எனஎதிரிமீது இந்தவழக்கில் குற்றம்சுமத்தப்பட்டுள்ளது. (உ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல்களை இவ்வருடத்திற்குள் நடத்த முடியுமெனத் தான் நம்புகிறார் எனவும் கூறினார்.

தூய்மையான அரசியல் கலாசாரத்தைநோக்கிஉருவாக்கப்பட்ட மார்ச் 12 இயக்கம் தேர்தல் வாக்காளர்களைத் தெளிவூட்டுவதற்காக நாடளாவிய ரீதியில் ஆரம்பித்த அறிவூட்டல் செயற்திட்டத்தின்நிறைவுநிகழ்வு நேற்று முற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேசமாநாட்டுமண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

தேர்தல்வட்டாரங்களின் அடிப்படையில் புதிய உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் முறை அன்று உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் தேர்தல் வட்டாரங்களை உருவாக்கும் ஆணைக்குழு தனது கடமைகளைச் சரிவர மேற்கொள்ளாமையின் பெறுபேறுகளையே இன்று நாம் அனுபவிக்கிறோம்.

இந்தப் பிரிவுகளை உருவாக்கும் செயற்பாடுகள் பக்கச்சார்பின்றியும், சுயாதீனமாகவும் நடைபெறாமையே உள்ளூராட்சிச் சபைத் தேர்தலைக் காலம் தாழ்த்தப்படுவதற்கான பிரதான காரணமாகும்.

எவ்வாறாயினும் புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் மீண்டும் குழுவொன்றை நியமித்துத் தேர்தல் வட்டாரங்களை உருவாக்கும் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டன. இவ்விடயம் தொடர்பாக எத்தகைய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதும் நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அரசியல் மற்றும் சமூக மறுசீரமைப்புகளுக்கு அவசியமான தொடக்கமாக இதைநான்கருதுகின்றேன்.

1978 ஆம் ஆண்டின் அரசமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட விருப்பு வாக்கு முறையினால் கட்சிகளின் அரசியல் கொள்கைகள் மற்றும் தத்துவங்கள் மறைக்கப்பட்டு தனிநபர்களின் செல்வாக்கு மேலோங்கியது. புதிய உள்ளூராட்சிசபைத் தேர்தல் முறை மற்றும் தொகுதி முறை தேர்தல் என்பன நாட்டு மக்களின் வெற்றி.

புதிய அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நாட்டின் மாற்றத்திற்கான யுகமொன்றின் ஆரம்பமாக அமைந்துள்ளது. 18 ஆவது திருத்தத்தின் ஊடாக இந்நாட்டின் அரசமைப்பில் மன்னராட்சி போன்ற தோற்றம் ஏற்படுத்தப்பட்டமையினாலேயே 19 ஆவது திருத்தத்தை மேற்கொள்ள நேர்ந்தது.

நீதிபதிகள், சட்டத்தரணிகள், பொலிஸ்மா அதிபர், தேர்தல் ஆணையாளர் மற்றும் ஆணைக் குழுக்கள் உள்ளிட்ட நாட்டின்பொறுப்பு வாய்ந்த சுயாதீன பக்கச்சார்பற்ற பதவிகளுக்காக உரியவர்களைநியமிக்கும் தனி அதிகாரம் அன்று ஜனாதிபதிக்கே இருந்தது.

இவ்வாறான நிலைமையில் மக்கள் மேற்கொண்ட எதிர்ப்புக்களின் பெறுபேறாகவே 19 ஆவதுதிருத்தம்மேற்கொள்ளப்பட்டது. - என்றார் ஜனாதிபதி. (ம)

## மஹிந்தவைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவசக்தி ஆனந்தன் நேற்று சபையில் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றவிவாதத்தில்கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழ்மக்களிடத்தில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அந்நியப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை அரசு முன்னெடுத்து வருகின்றது என்றும் அவர் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"வடக்கிலும், கிழக்கிலும் தொடர்ச்சியாகப்போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. கடும் வெய்யிலுக்கு மத்தியிலும் காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஏ-9 வீதிக்கு அருகில் அணிதிரண்டு போராடி வருகின்றார்கள். 40 நாள்கள் கடந்துள்ள போதிலும் இதற்கு அரசு உரிய பதிலை வழங்கவில்லை.

"தெற்கிலுள்ள பெண்கள் இப்படி வீதியில் கிடந்தால் நீங்கள் (அரசு) சும்மா இருப்பீர்களா? வடக்கு, கிழக்கில் போராடுபவர்கள் தமிழர்கள் என்பதால்தான் அலட்சியப்போக்கில் செயற்படுகின்றீர்கள். இதற்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"கையளிக்கப்பட்டு - சரணடைந்து-காணாமலாக்கப்பட்டுள்ளவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் இருக்கின்றார்களா? இல்லையா? - என்பதையே அறிய முற்படுகின்றோம். போர் முடிந்து8வருடங்கள்கடந்துள்ள போதிலும் இதற்குரிய தீர்வு - பதில் - இன்னும் வழங்கப்படவில்லை.

காணாமல் போனவர்களின் தாய்மார்கண்ணீர் வடித்தபடியே தமது உறவுகளைத் தேடித் திரிகின்றனர். அவர்களுக்கு உரிய பதில் சொல்லவேண்டும். கண்ணீருடன் விளையாடக்கூடாது.

குறிப்பாக, நல்லிணக்கம், சமாதானம் பிறக்க வேண்டுமானால் எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். ஆனால், ஆட்சி மாறி இரண்டு வருடங்கள்கடந்துள்ளபோதிலும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில்எதுவும்நடக்கவில்லை.

மஹிந்தவைக்காரணம்காட்டியே தமிழ் மக்கள் நடுவீதியில் விடப்பட்டுள்ளனர். இதனால், மக்கள் அரசுக்கு எதிராகப் போராட்டம்நடத்துகின்றனர். அத்தகைய போராட்டங்கள் எமக்கு எதிராகவும்நடத்தப்படுகின்றன. ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்டது போல்தமிழர்களின் ஜனநாயகக் கட்டமைப்பையும் அழிப்பதற்குரிய முயற்சி எடுக்கப்படுவது போல் தெரிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு நம்பிக்கைக்குரியவர்களாக இல்லை, அவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இல்லை என மக்கள் மத்தியில் நம்பகத்தன்மையை ஏற்படுத்தி அவர்களிடமிருந்து கூட்டமைப்பை அந்நியப்படுத்துவது போல்தான் அரசின் அணுகுமுறைகள் இருக்கின்றன. தேர்தல் அரசியல், கட்சி அரசியல் நடந்தாலும் கூட மக்களுக்காக அரசியல் நடத்தப்படும் நிலை ஏற்பட வேண்டும்" என்றார்.

## உறணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளனர். கிணறுகளை மூடியுள்ளனர். அந்த இடம் பற்றைகளும் முட் புதர்களும் சூழ்ந்த இடமாகக் காட்சியளிக்கின்றது. இதனால் மக்கள் உடனடியாக மீளக்குடியேற முடியாமல் உள்ளது.

மேற்படி ஊறணியில் இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கடந்த 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற மோதல்களால் வெளியேற்றப்பட்ட பின்னர் அந்தக் காணிகளை படையினர் ஆக்கிரமித்திருந்தனர்.

காணிகளை விடுவித்து தங்களை மீளக்குடியேற்றுமாறு அந்தப் பகுதி மக்கள் பல போராட்டங்களை முன்னெடுத்தனர். குறிப்பாக, யாழ். குடாநாட்டை படையினர் கைப்பற்றிய 1996 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை மக்கள் வெகுஜன ரீதியான போராட்டங்களை முன்னெடுத்தனர். இந்நிலையிலேயே நேற்று மேற்படிக் காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன.

இதேவேளை, காணி விடுவிப்புக்குச் சென்றிருந்த மக்கள் அங்கு இருந்த தமது வீடுகளைக் காணவில்லை என்று கதறி அழுதனர். கடந்த 1990 ஆம் ஆண்டு தாங்கள் இடம்பெயர முன்னர் அங்கு சிறந்த கல் வீடுகளில் வசதியான வாழ்க்கை வாழ்ந்தார்கள் எனக்கூறிய அவர்கள் இன்று தமது வீடுகள் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன எனக் கவலையுடன் கூறினர்.

மேலும், அங்குள்ள நான்கு வரையான வீடுகளை மட்டும் விட்டுவைத்துள்ள படையினர் அந்த வீடுகளை மெருகூட்டி, வசதிகளை ஏற்படுத்தியுள்ளனர். குறிப்பாக, அந்த வீடுகளுக்கு மின் சார இணைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு குளிரூட்டி வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அந்த வீடுகளைச் சுற்றி பாதுகாப்பு வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

படை அதிகாரிகள் தமது பிரத்தியேகத் தங்குமிடங்களாக அந்த வீடுகளைப் பயன்படுத்தி வருகின்றனர் என மக்கள் தெரிவித்தனர். அந்த வீடுகளையும் விடுவித்துப்படையினரை வெளியேறிச் செல்லுமாறு மக்கள் கோரினர்.

ஆனால், அந்த வீடுகளை உடனடியாக விடுவிக்க முடியாது எனத்தெரிவித்துள்ளபடையினர் காலப்போக்கில் அவை விடுவிக்கப்படும் எனக் கூறினர் எனத் தெரிய வருகின்றது.

அத்துடன், ஊறணி கடற்கரையில் அதிகளவு முருகைக்கற்கள் அகற்றப்படாமல் உள்ளன. அதனால் உடனடியாக அங்கு தொழில் செய்வது சாத்தியமற்றது என மீனவர்கள் தெரிவித்தனர். தாங்கள் இடம்பெயரும் போது அங்கு கைவிட்டுச் சென்ற கடற்தொழில் படகுகள் மற்றும் எந்த உபகரணங்களும் தற்போது அங்கு காணப்படவில்லை எனவும் அவர்கள் கவலை வெளியிட்டனர்.

இதேவேளை, விடுவிக்கப்பட்ட பிரதேசத்திற்கு அருகில் படையினரின் இரண்டு முகாம்கள் தொடர்ந்தும் இருக்கின்றன எனவும் அந்த முகாம்களையும் அங்கிருந்து அகற்றினாலேயே மீள் குடியமர்வு சாத்தியப்படும் எனவும் மக்கள் தெரிவித்தனர். (ம)

# கலையை அழியவிடாது பேண வேண்டும்

## பேசாலை கத்தோலிக்க குரு முதல்வர் வேண்டுகோள்



மன்னார், ஏப்.08

எமது முன்னோர்கள் பேணிப் பாதுகாத்துவந்த கலைகளை அழிய விடாது பேணிப் பாது காத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

-இவ்வாறு மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட் பணி ஏ.விக்ரர் சோசை அடி களார் தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத் தின் பேசாலை புனித வெற் றிநாயகி ஆலய பங்கு மக்களால் பேசாலையில் 150 வருடத் துக்கு மேலான பாரியம்பரிய உடக்கு பாஸ் நேற்றும் நேற்று முன்தினமும் இடம்பெற்றன.

'பங்கு தந்தை அருட்பணி அலெக்ஸாண்டர் பெனோ சில்வா தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், மன் னார் மறை மாவட்ட குரு முதல் வர் அருட்பணி.ஏ.விக்ரர் சோசை அடிகளார் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகை யில் தெரிவித்தவை வருமாறு:-

இன்று பேசாலை பங்கு 'சிலுவையில் இரட்சனியம்' என்ற வரலாற்று சிறப்புமிக்க உடக்கு பாஸை நடத்துவதை யிட்டு நாம் மகிழ்ச்சி அடை கின்றோம். அத்துடன் மன்னார் மறை மாவட்டம் சார்பாகவும் நாங்கள் இந்தப் பங்கு மக்க ளுக்கு நன்றியும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இந்த முயற்சிக்காக நீங்கள் அனை வரும் ஒன்றுபட்டு செயலாற் றியுள்ளீர்கள்.

'சிலுவையில் இரட்சனியம்' என்ற தொனிப்பொருளில் மக்கள் கண்டு களிப்பதற்கு அத்துடன் இறை யேசுவைப் பற்றி சிந்திப்பதற்கு பேசாலை மக்களாகிய நீங்கள் முயற்சிகள் மேற்கொண்டுள்ளீர்கள். இந்த செயல்பாட்டுக்கு இறைவன் ஆசீர்வதிப்பார்.

பேசாலை கத்தோலிக்க மக்களை பொறுத்தமட்டில் இலங்கையின் திருச்சபையின் வரலாற்றில் பேசாலை கத் தோலிக்க மக்களுக்கென ஒரு தனி இடம் இருக்கின்றது.

ஏனென்றால் இந்த இரண்டு தினங்களும் காண்பிக்கின்ற கலை கலாசாரத்தை கத்தோலிக்க கலை வடிவங்களை இந்த உடக்கு பாஸ் ஊடாக நீங்கள் வெளி கொணர்வது உங்களது சிறப்பு அம்சமாக இருக்கின்றது.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக திருச்சபையில் ஒரு பாரம்பரியத்தை நீங்கள் பரா மரித்து இவற்றை ஒரு பொக்கி ஷமாக விசுவாசத்தை வெளிக் காட்டும் இத்தகைய கலை வடி வத்தை பேணி வந்திருக்கின்றீர் கள்.

ஆகவே இது குறித்து உங் களை நாங்கள் பாராட்டி நிற்கின் றோம். உங்களுக்கே உரித்தான கலை பொக்கிஷத்தை விசுவா சத்தின் வடிவத்தை தொடர்ந்து இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பது எங்களது அவாவாகும்.- என்றார். (ஐ-112)

## இனங்களுக்கிடையே ஒற்றுமை நிலவ 600 மாணவர்களுக்கு சித்திரப் போட்டிகள்







வவுனியா, ஏப்.08

வன்னி பிராந்திய பாடசாலைகளைச் சேர்ந்த 600 மாணவர்களை ஒன்றிணைத்து மாபெரும் சித்திரம் வரையும் நிகழ்வு ஒன்று வன்னி பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலை மையில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் வவுனியா பிரதான பொலிஸ் நிலையக் கட்டடத் தொகு தியில் இடம்பெற்றது.

இனங்களுக்கிடையே ஒற்றுமை மற்றும் நல்லிணக் கத்தின் ஊடாக நாட்டின் அபிவிருத்தி எனும் தொனிப் பொருளில் தரம் 7, 8, 9, 10 மாணவர்களை ஒன்றி ணைத்து இந்தச் சித்திரப்போட்டி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், வவுனியா மாவட்ட அரச அதிபர் எம். பி. ரோஹண புஸ்பகுமார, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிரகுமார, உதவி பொலிஸ் அத்தியட் சகர் மல்வகே, வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சோமரத்ன விஜயமுனி, வவுனியா வடக்கு கல்வி வலயப் பணிப்பாளர் வீ. இராதாகிருஷ் ணன், உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வீரசிங்கம், அதிபர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

# வீதியை திருத்துமாறு மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஏப்.08

சாவகச்சேரி நகராட்சி மன் றத்தின் ஆறாம் வட்டார எல் லைக்குள் அமைந்துள்ள இரா சையா வீதியைத் திருத்தி யமைக்குமாறு இந்தப் பகுதி மக் கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதி நீண்ட காலமாக எந்தவித புனரமைப்பும் இன்றி காணப்படுகிறது எனவும் இதனால் போக்குவரத்து செய்ய முடியாதநிலைகாணப்படுகிறது என்றும் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியை விவசாயி கள், பொதுமக்கள் அயல் கிராமமான மறவன்புலோ விலிருந்துசாவகச்சேரிபகுதியில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் எனப்பல ரும்பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வீதி சீரின்மையால் இவர்கள் தினமும் பல்வேறு இன் னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக் கின்றனர்.

எதிர்வரும் பருவ மழைக்கு முன்னதாக இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு சாவ கச்சேரி நகராட்சி மன்ற செய லாளரிடம் நுணாவில் மத்தி கமக்கார அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ-21)




## ஆன்மீகத் தேடலை அர்த்தமுள்ளதாக்குவோம்!

புனிதவாரப் பயணம், எம் மனங்களை புனிதப்படுத்தித் தியானிக்கும் வழிபாடு கள். எந்தச் சமயங்களிலும் விழாக்கள் கொண்டாட்டங்கள், கேளிக்கைகளாகி விடாது அர்த்தமுள்ள ஆன்மீகத் தெளிவுடன் வழிகாட்டப்பட மூத்தோர் வழிகாட்டிகள் எடுத்த தலைமுறையினருக்கு வழிகாட்டும் போதுதான் வழிபாடுகள் அர்த்தம் பெறும்.

உடைகள், உணவு விருந்துகள், சோடனைகள் மட்டும் விழாக்கள் அல்ல. புனித ஆன்மீக சிந்தனைகள் புரியாததால் ஏற்படும் விளைவுகளே கேளிக்கைகளாகி ஆன்மீகம் அர்த்த மிழக்கிறது. இயேசுவின் சிலுவைப் பயணம் இன்றுவரை சிந்தித்து தியானித்து பரமனின் பாடுகள், சிலுவைப் பய ணங்களும் ஒருபுறம் நடக்க விழாவுக்காகக் காத்திருக்கும் ஒரு சிலரது முன் ஆயத்தங்கள் வழிபாடுகளின் புனிதத்தைச் சிதைத்து விடாது பாதுகாக்க புனிதவாரம் எமது சிந்தனை களை ஆன்மீகத்தை ஆழப்படுத்தக் கிடைத்த சந்தர்ப் பங்களாக்கி சிறுவர்களின் மனப் பக்குவத்தில் ஆன்மீகத்தை ஆளப்படுத்தல் முக்கியமாகும்.

ஆண்டவர் கூறுவது: ''இதோ! என் ஊழியர் அவருக்கு நான் ஆதரவளிக்கிறேன். நான் தேர்ந்து கொண்டவர் அவர்; அவரால் என்நெஞ்சம் பூரிப்படைகிறது. அவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன்; அவர் மக்கள் இனங்களுக்கு நீதி வழங்குவார். அவர் கூக்குரலிட மாட்டார், தம்குரலை உயர்த்த மாட்டார்; உலகில் நீதியை நிலைநாட்டும் வரை சோர்வ டையார்''

இன்று பல்வேறுபட்ட குரலொலிகள், ஏக்க உணர்வுகள் நீதிக்காய் ஏங்கும் தருணங்களில் எமது பார்வை நிலையில் பங்கேற்பில் உள்ளது. எமது வேண்டுதல் பிறரது தேவைக்கு செவிமடுக்கின்றதா? எமது விழிகள் மூடி குருடரானோமா?

''பார்வை இழந்தோரின் கண்களைத்திறக்கவும், கைதிகளின் தலைகளை அறுக்கவும், இருளில் இருப்போரைச் சிறையில் நின்று மீட்கவும் உம்மை அழைத்தேன்'' என நல்ல செய்தியை எமது அழைப்பாக ஏற்போமா.

எமது ஆன்மீகப் பயணம் இருளில் இருந்து ஒளியைத் தேடிப் பயணிக்க புனித வாரத்தின் அழைப்பு ஆன்மீகத் தேடலின் விடையாக எமது மனதை ஒரு நிலைப்படுத்தி இறை சன்னிதியில் சங்கமிக்கும் உள்ளங்கள் உணர்வுகளுடன் இறை உறவை பிறர் மகிழ்வுக்காக அர்ப்பணிக்க புனித வாரத்தைப் பயனுள்ளதாக்குவோம்.!

பெ.போரா்பாலா

## சமுர்த்தி அபிமானி நிகழ்ச்சித் திட்டம் வவுனியாவில் ஆரம்பம்



வவுனியாவில் சமுர்த்தி அபிமானி நிகழ்ச்சித் திட்டம் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலக வளாகத்தில் ஆரம் பித்து வைக்கப்பட்டது.

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்கு விக்கும் முகமாக சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களை காட்சிப்படுத்தியிருந்தது டன் விற்பனையிலும் ஈடுபட்டிருந்தனர்.



இந்த நிகழ்வை வவுனியா மாவட்ட சமுர்த்தி அபி விருத்தித் திணைக்களப் பணிப்பாளரின் அழைப்பில் வவுனியா மாவட்ட அரச அதிபர் ரோஹண புஸ்பகுமார ஆரம்பித்து வைத்தார். (ஐ-100)

## சமுர்த்திக் கண்காட்சி கிளிநொச்சியிலும்!

சமுர்த்தி அபிமானி 2017 எனும் வர்த்தகக் கண்காட்சி கிளிநொச்சியிலும் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.


கிளிநொச்சி டிப்போ சந்தியில் கிளி நொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் சம்பிரதாய பூர்வ மாக கண்காட்சி ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.



புதுவருடப்பிறப்பை முன்னிட்டே இந்தக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது. அனைத்து மாவட்டங் களிலும் நடத்தப்பட்டு வருகிறது (ஐ-70)



இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த ஊறணி மீனவர் இறங்குதுறைக்கு அண்மித்த கடலோரப் பிரதேசத்தில் சுமார் 29 ஏக்கர் நிலப்பரப்பு நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வின் போது மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டது.
இந்த நிகழ்வில் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராய்ச்சி, யாழ். அரச அதிபர் என்.வேதநாயகன் ஆகியோர் பங்குபற்றினர். (உ)



திருமறைக் கலாமன்றத்தால் தயாரித்து நெறிப்படுத்தப்பட்ட, கல்வாரி யாகம் (திருப்பாடல்களின் காட்சி) தவக்கால ஆற்றுகை நேற்று வெள்ளிக்கிழமை திருமறைக் கலாமன்றின் யாழ். அரங்கில் நிகழ்த்தப்பட்ட போது...




# வடக்கு, கிழக்கு மக்களின் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்படுகின்றன!

## கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமட் சீற்றம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் காணிகளை படையினரும்வனப்பாதுகாப்புத் திணைக்களமும் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் திட்டமிட்ட வகையில் இடம்பெற்று வருகின்றன என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமத், ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவிக்கையில் -

போல் கோட்பிரி தலைமையிலான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக் குழுவினருடன் சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போது கிழக்கு மாகாணத்தில் இருக்கும் பிரச்சினைகள் - குறிப்பாக சம்பூர் வீட்டுத்திட்ட பிரச்சினை -தொடர்பாக அவருக்கு எடுத்துக்கூறினோம். அத்துடன் சம்பூரில் இது வரைக்கும் கட்டி முடிக்கப்படாத வீடுகளைத்துரிதமாகஅவற்றின் வேலைகளை முடித்து மக்களுக்கு வழங்க இருக்கின்றோம்-அதற்கானஉதவிகளின் தேவை குறித்து விளக்கினோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்கொண்டுவரும் அடிப்படைப்பிரச்சினைகளைத்தீர்ப்பது தொடர்பாகவும் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தோம். அதே போன்று மீள்குடியேற்றப்படாமல் இருக்கின்ற கிராமங்கள் மற்றும் மீள் குடியேற்றப்பட்டு இன்னும்அத்தியாவசியத்தேவைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்ற



கிராமங்கள் தொடர்பாகவும் விளக்கிக் கூறினோம்.

அதேபோன்று வடக்கில் வில்பத்துவில் முசலி மற்றும் மறிச்சிக்கட்டு பிரதேசங்களில் வன பாதுகாப்புத் திணைக்களத்தால் மக்களின் காணிகள் கையப்படுத் தப்பட்டுவருவது தொடர்பாகவும் தூதுக்குழுவினரிடம் விளக்கினோம். மத்திய அரசாங்கத்தால் இவ்வாறு திடீர் திடீரென மக்க ளின் காணிகள் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அத்து மீறிப் பறிக்கப்படுகின்ற நடவடிக்கை தொடர்பாகவும் தெரிவித்தோம். - என்றார்

## குளம் புனரமைப்பின்போது கடற்படைச் சிப்பாய் பலி

மஹியங்கனை நாகதீப குளத்தின் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் குளக்கட்டு ஒன்றில் இறுகி உயிரிழந்துள்ளார்.

ஒலுவில் கடற்படை முகாமில் பணியாற்றிய, மஹகனதராவ யாய பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதான கடற்படைச் சிப்பாயே மரணமானார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சடலம் பதுளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பொலிஸார்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## 43 ஆவது நாளாகவும் தொடர்ந்து வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம்



காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் வவுனியாவில் சுழற்சி முறையில் முன்னெடுத்து வரும் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை 43 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.